விலை ரூபா 1-00 ★

# ஈழநாடு

THE EELANADU

மலர் 24 சித்திரை 4 ஐ. ஆகிர் 22 இதழ் 63

யாழ்ப்பாணம் சனிக்கிழமை 17—4—82

## அமைச்சர்கள் கிளிநொச்சி விஜயம்:

# ஆனந்தசங்கரி கோரிக்கை

(கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி நிருபர்)

கிளிநொச்சித் தொகுதிக்கு நேற்று விஜயம்செய்த காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்காவுக்கு, கிராமிய அபிவிருத்தி அமைச்சர் திரு. சௌ. தொண்டமானுக்கும் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

ஹெலிக்கோப்டரில் வந்திறங்கிய அமைச்சர்கள் இருவரையும் யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி. விஜயக்கோன், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. சு. நடராசா. யாழ். அரசாங்க அதிபர் தேவநேசன் நேசையா கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் திரு. கு. சுப்பிரமணியம் ஆகியோர் உட்படமற்றும் உயர்அரச அதிகாரிகள் வரவேற்று அழைத்து வந்தார்கள். ஹெலிகப்டரிலிருந்து அமைச்சர்கள் அழைத்து வரப்பட்டபோது, கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரியும் வந்து வரவேற்பில் கலந்துகொண்டார்.

றெட்றிக்கோ மைதானத்தில் தேசியக்கொடியும், யாழ். மாவட்ட நந்திக்கொடியும் பறக்கவிடப்பட்டிருந்தன.

மைதானம் சிவப்பு, மஞ்சள், பச்சை நிற சோடனைகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. ஹெலிகப்டரிலிருந்து அமைச்சர்கள் மேள, நாதஸ்வர இசையுடன் அழைத்துவரப்பட்டார்கள். அமைச்சர் குழுவினர் அங்கிருந்துநேரே அரச விருந்தினர் விடுதிக்குச்சென்றனர்.

கிளிநொச்சி நகரமண்டபத்தில் அமைச்சர்கள் குழு, மற்றும் உயர் அதிகாரிகளைக் கொண்ட ஒரு மகாநாடு நடைபெற்றது.

இம் மகாநாட்டில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி, யாழ். மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. சு. நடராசா, யாழ். மாவட்ட அமைச்சர் திரு. யு. பி, விஜயக்கோன், யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஆகியோர் உட்பட மற்றும் பல அரசாங்க உயர் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

இம்மகாநாட்டு மண்டபத்திற்குள் பொதுமக்கள் எவரும் அனுமதிக்கப்படவில்லை.

பத்திரிகையாளர் முதலில் அனுமதிக்கப்படாதபோதிலும், பின்னர் உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மகாநாட்டில்முதலில் யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு.பஞ்சலிங்கம், கிளிநொச்சி கண்டிவீதியின் கிழக்குப்பகுதியில் 155வது மைல்தொடக்கம் 157 மைல்வரையுள்ள பிரதேசத்தின் வரைபடம் ஒன்றினை அமைச்சர்களுக்கு காண்பித்து அப்பகுதியிலுள்ள இடங்களைப் பற்றி விளக்கமளித்தார்.

இதனையடுத்து கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி இம் மகாநாட்டில் உரையாற்றுகையில்; ''எனது 25 வருட அரசியல் வாழ்க்கையில் நான் எவர் மீதும், தமிழர், சிங்களவர், மலையகத்தவர் என்ற வேறுபாடு காட்டியதில்லை. 1977ம் ஆண்டு இனக் கலவரத்தின்போது, பெரும்

(8ம் பககம் பார்க்க)

# யாழ். நகரில் சர்வதேச விளையாட்டு மைதானம்!

## கார்க்கைதீவு தெரிவு!

(யாழ்ப்பாணம்)

சர்வதேச கிரிக்கட் விளையாட்டு மைதானம் யாழ். மாவட்டத்தில் காக்கை தீவில் அமைக்கப்படும்.

சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானமொன்றை யாழ்ப்பாணத்தில் அமைக்கும் பொருட்டு அரியாலை, பொம்மைவெளி, காக்கைதீவு ஆகிய இடங்களை சென்று பார்வையிட்ட காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசநாயக்கா தலைமையிலான குழு சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானத்திற்கு காக்கை தீவே பொருத்தமான இடமென்று சிபார்சு செய்து அதனைத் தெரிவு செய்துள்ளது.

காக்கைதீவில் சர்வதேச விளையாட்டுமைதானம்அமைக்கப்பட்ட பின்னர் அங்கு கிரிக்கெட், ஹாக்கி, உதைபந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் போன்ற சர்வதேச போட்டிகள் இடப்பெறுமென்றும் தெரிவிக்கப்பட்டது.

இம்மூன்று இடங்களையும் அமைச்சர் திரு. காமினி திசநாயக்காவுடன் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. எஸ். நடராசா, யாழ். மேலதிக அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கம், யாழ். உதவி பொலிஸ் மா அதிபர் திரு. அ. நவரட்ணம் ஆகியோரும் சென்று பார்வையிட்டனர்.

யாழ். மாவட்டத்திலும், சர்வதேச விளையாட்டுப்போட்டிகள் நடைபெறும்வகையில் ஒரு விளையாட்டு மைதானம் அமைக்க நடவடிக்கை எடுப்பேன்' என்று அமைச்சர் திரு. காமினி திஸநாயக்கா முன்னர் தெரிவித்திருந்தும் அதற்கிணங்கவே அவர் நேரில் வந்து இங்கு பார்வையிட்டதும் குறிப்பிடத்தக்கது.

பல லட்ச ரூபா செலவில் இந்த விளையாட்டு மைதானம் அமைக்கப்படும் பட்சத்தில் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளும் மற்றும் சர்வதேச மட்டத்திலான போட்டிகளும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும்.

## ''நான் மன்னிப்பு வழங்கினுல் மட்டுமே போட்டியிடலாம்''

### சிறிமாபற்றி ஜனதிபதி

(ஹங்குரண்கெத்த)

''ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சித்தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவுக்கு நான் மன்னிப்பு வழங்கினுல் மட்டுமே 1986–ம் ஆண்டுக்கு முன்னர் அவர் தேர்தலில் போட்டியிடலாம். சுதந்திரக்கட்சி இணைப்பு பற்றி பெரிதாகப் பேசப்படும் போதிலும் அது சாத்தியமில்லை''.

இவ்வாறு ஜனதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன நேற்று முன்தினம் ஹங்குரண்கெத்தவில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில் கூறினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எதிர்காலமே கிடையாது. அதன் ஆயுள் முடிந்துவிட்டது. அதற்கு உயிரூட்ட புதிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டாலும் அதுசாத்தியப்படமாட்டாது. சுதந்திரக்கட்சியின் ஒற்றுமை பாதிக்கப்பட்டதற்கு சீனசார்புகட்சியினர் தான் காரணம்'' என்றும் கூறினர்.

வடபிராந்திய போக்குவரத்துசபை

## நிர்வாக அமைப்பில் பாரிய மாற்றங்கள்

(கரவெட்டி)

வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் நிர்வாக அமைப்பில் அடுத்தமாதம் முதல் மாற்றங்கள் செய்யப்படவுள்ளதாகத் தெரிய வருகிறது.

இலங்கை போக்குவரத்துச் சபை நிர்வாகம் பன்முகப்படுத்தப்பட்டபோது வடபிராந்தியப் போக்குவரத்துச் சபையால் வவனியாவிலும், கோண்டாவிலிலும் பிரதேச அலுவலகங்கள் அமைக்கப்பட்டு பிரதேச முகாமையாளர்கள், கணக்காளர்கள், பொறியியலாளர்கள் நியமிக்கப்பட்டு நிர்வாகம் மேலும் பன்முகப்படுத்தப்பட்டது. ஆனுல், அண்மையில்இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையினுல் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இணங்கஇந்த அலுவலகங்கள் மே மாதம் முதலாம் திகதியிலிருந்துமூடப்பட்டு, வடபிராந்திய போக்குவரத்துச்சபை தலைமைக்காரியாலயத்திலிருந்து முழுநிர்வாகக் கடமைகளையும் நிறைவேற்றும் என்று அறியப்படுகிறது.

சர்வதேச அன்புச் சகோதரத்துவ இயக்கம்

**யாழ். பகிரங்கக் கூட்டம்**

காலம்: 17-4-82 சனிக்கிழமை
மாலை 5·30 மணி

இடம்: வீரசிங்கம் மண்டபம்

பேச்சாளர்கள்:
ஜப்பானியக் குழுவினர்,
H. ஒகுடா, (பிரதம காரியதரிசி)
யாழ். பிரமுகர்கள்,
பாராளுமன்ற உறுப்பினர்கள்,
இலங்கை ச. அ. ச. இ. அங்கத்தவர்கள்
கலந்து கொள்வர்.

★ வேல் ஆனந்தனினதும் குழுவினரதும் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

2860

## ஹேவாஹெட்ட எம். பி. ராஜினுமா

((நுவரெலியா)

ஹேவாஹெட்ட எம். பி. திரு. அநுரா டானியல் தமது பாராளுமன்ற அங்கத்தவர்பதவியை ராஜினுமாச் செய்துள்ளதாக அறியப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கியதேசியக்கட்சி அங்கத்தவராக ஹேவாஹெட்ட தொகுதியில் போட்டியிட்டு 17,355 அதிகப்படியான வாக்குகளினுல் வெற்றியீட்டிய திரு. அநுரா டானியல்தான் பாராளுமன்றத்தில் மிகவும் வயது குறைந்த அங்கத்தவராகும்.

பாராளுமன்றத்தில் பிரவேசித்தபோது அவருக்கு வயது

(8ம் பக்கம் பார்க்க)

## வட்டு. கடற்றொழிலாளர், கூட்டுறவுசங்கத்துக்கு ஜனதிபதி பரிசு!

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டு ஏற்றுமதிக்கான 1981ம் ஆண்டு ஜனதிபதி விருது வட்டுக்கோட்டை கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையிலிருந்து கடலட்டைகளை வெளிநாட்டுக்கு பெரும் தொகையாக ஏற்றுமதி செய்ததற்காகவே இச் சங்கத்திற்கு ஜனதிபதி விருதான 3லட்சத்து 93,000 ரூபா கிடைத்துள்ளது.

ஜனதிபதி விருது வழங்கும் வைபவம் இம்மாதம் 19ம் திகதி மாலை இச்சங்கத்தின் தலைவரும், யாழ். உதவி அரசாங்க அதிபருமான திரு. எம். சுப்பிரமணியம் தலைமையில் சித்தன்கேணியில் இடம்பெறவுள்ளது.

இவ்வைபவத்தில் எதிர்க்கட்சி தலைவர் திரு.அ. அமிர்தலிங்கம், யாழ்ப்பாண அபிவிருத்தி சபைதலைவர் திரு. எஸ். நடராசா, யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

(வெ)

## வடிகால் பகுதியில் சிசுவின் சடலம்

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரி வடிகால் பகுதியிலிருந்து ஒரு குறைமாத சிசுவின் சடலம் நேற்று கண்டுபிடிக்கப்பட்டது.

சடலம் யாழ். ஆஸ்பத்திரி பிரேதச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது. யாழ். பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

### மணிவாக்கு

மனத்திருப்தியிலும் சரீர ஆரோக்கியத்திலும், நற்குண நற்செய்கைகளை உடையராய் வாழ்தலிலுமே அன்றி, திரவியத்திலே இன்பம் ஜனியாது.

— நாவலர்.

# நமது நோக்கு

## பலெஸ்தீனியர் விடுதலை

மத்திய கிழக்கின் நிலப் பிரச்சினை பைபிள் காலத்திலேயே ஆரம்பமானது.

படைப்பலம் உள்ளவர் கையே மேலோங்கிவந்ததால் வல்லவன் பக்கம் வெற்றிகிட்டியது.

இந்தப் பண்டைக்காலப் போக்கை இன்றும் இஸ்ரேல் கடைப்பிடித்துவருவதால் பலெஸ்தீனிய பழங்குடி மக்கள் நாடற்ற நிலையில் சுதந்திர மக்களாக வாழ வழி இன்னும் பிறக்கவில்லை.

இரண்டாவது உலகமகாயுத்தம் இஸ்ரேலுக்கு விடிவு கண்டது. ஹிட்லரின் உலக ஆதிக்க வெறி அடக்கப்பட்டது.அமெரிக்க உதவியுடன் இஸ்ரேல் உதயமானது.

அதேபோல இன்று இஸ்ரேலின் ஆக்கிரமிப்புக்குஉள்ளான பலெஸ்தீனிய மக்கள் தாம் இழந்த நாடுகளை மீட்கவும் சுதந்திரத்தை நிலைநாட்டவும் திடசங்கற்பம் பூண்டுள்ளனர்.

பகைமை குறுகியகாலப் பயிரல்லவென்பது வரலாறு காட்டும் பாடம். காஸாவின் மேற்குக் கரையில் கைப்பற்றப்பட்ட பகுதிகளைக் கண்காணிக்கும் இஸ்ரேல் ராணுவத்தினர் அடிக்கடிசொல்வது இதனை விளக்கும் 'பன்னிரண்டு வயதடையும் வரைக்கும் ஹிட்லரையும் அவருடைய கொடூர நா(ச)ஸிப்படைகளையும் வெறுத்துத் தள்ளப் பயிற்றப்பட்டோம்; 12 வயது தொடக்கம் 18 வயதுவரைக்கும் அரபுமக்கள் எங்கள் எதிரிகளென்ற பாடம் புகட்டப்பட்டது.'

இந்த அடிப்படையில் இஸ்ரேல் நியாயங்கண்டு பலெஸ்தீனியரின் அபிலாஷைகளை நிறைவேற்ற எவ்வகையிலும் ஒருப்படுவாரோவென்று அஞ்சப்படுகின்றது.

அதேசமயம் பலெஸ்தீனிய விடுதலை இயக்கம், அதன் பயங்கரவாதம்சாதாரணமானதொன்றல்ல; அகில உலகிலுமே ஆதரவு திரட்டியிருக்கிறது; அதன் கெரில்லாப்படைகளின் சாதனை உலகறிந்த விடயம்; தேசபக்தி தீவிரமடைந்தால் தியாகஉணர்வு உச்சிக்கு எட்டும்.

இஸ்ரேலின் பிடிவாதப் போக்கு பலெஸ்தீனிய இயக்கத்தை இறுகச்செய்ததொழிய எவ்வித தளர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை.

உலக அபிப்பிராயம் நாட்டை இழந்த மக்களின் சார்பாகவே உள்ளது. இஸ்ரேலுக்கு என்றும் ஆதரவளிக்கும் அமெரிக்காவுக்கே இவ்விடயத்தில் இஸ்ரேலின் போக்குப் பிடிக்கவில்லை.

அரபு—இஸ்ரேல் 'காம்ப் டேவிட்' சமாதான ஒப்பந்தம் இந்தப் பிரச்சினையால் குழம்பிவிடுமோவென்ற பயம் அமெரிக்காவிற்கு உண்டு.

அரபுநாடுகள் சிறப்பாகவும் உலகநாடுகள் பொதுவாகவும் பலெஸ்தீனியசுதந்திரத்திற்கு ஆதரவு அளிக்கின்றன.

இலங்கை திட்டவட்டமாக பலெஸ்தீனிய விடுதலை இயக்கத்துக்குப் பூரண ஆதரவு வழங்குமென்று தெரிவித்திருக்கின்றது. எங்கள் வெளிவிவகார அமைச்சர் இஸ்லாமியரென்றதற்காகவல்ல; எந்த நாடும், எந்த இனமும் சுதந்திரமாக வாழவேண்டுமென்ற பெருநோக்கையே எமது நாடு கடைப்பிடிப்பதே காரணம்; அந்தத் தார்மீகக் கொள்கை தன் வீட்டிலே தொடங்கவேண்டுமென்பதே எமது கோரிக்கை.

வட அயர்லாந்து கத்தோலிக்க மக்கள், பலெஸ்தீனிய விடுதலை இயக்கம், இலங்கைத் தமிழர் சுயநிர்ணயம்—இவைபோன்ற சுதந்திர இயக்கங்கள் தங்கள் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்ற உலகப் பொது அபிப்பிராயம் பக்கபலமாக அமையவேண்டும்.

## கெட்டகுடியே கெடும்?

பழமொழிகள் விடயத்தை விளக்கும் வல்லமையுடையபோதும் அவை உணர்த்தும் உண்மைகள் என்றும் மாறுதலையல்ல. கெட்டகுடி என்றும் கெட்டுப்போவதை நல்லாட்சி தடுக்கமுடியாதா?

பதினேழு மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட ஏழை விவசாயிகளுக்கு நேரடி நிவாரணம் அளிக்கும் திட்டம் செயற்பட ஆரம்பித்துவிட்டது; அந்த சுபமுகூர்த்தத்திலேயே ஊழலும் தன் தொழிலில் இறங்கிவிட்டதாம்!

இந்த தருமநிதியைத் தானும் தொடாமல் விடுவதற்கு அதில் உருசிகண்ட சமூகவிரோதிகளுக்கு மனம் வருமா? பட்டினியால் வாடும் வறிய குடும்பத்தினருக்கு கிடைக்கவேண்டிய பணம், எத்தனை இடங்களில் திசைமாறிப்போகிறதென்பதை ஜனாதிபதி ஜெயவர்த்தன நேரடியாக கண்காணிக்க ஒரு தீவிர திட்டம் வகுத்துள்ளார்.

சமூகசேவை திணைக்கள அதிகாரிகள் மிகவிழிப்புணர்வுடன் இப் பணியைக் கவனித்து பங்கீடுசெய்த பணத்தின் முழுவிபரம் பற்றி அறிக்கை சமர்ப்பிக்க பணிக்கப்பட்டுள்ளனர்.

இதில் கண்டுபிடிக்கப்படும் மோசடி எதுவும் நேரில் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படவேண்டிய அவசியம் வற்புறுத்தப்பட்டிருக்கிறது.

இதனை சிரமேற்கொண்டு சமூகசேவை அமைச்சு அதிகாரிகள் மிக் அவதானத்துடன் அலுவல்களை கவனிக்கின்றனர்.

இந்த ஞானம் சாதாரண விடயங்களில் நிர்வாகத்துக்கு ஏற்படுமானல் இலங்கை 'தர்மதீபம்' என்ற கௌரவத்துக்கு உண்மையில் உரித்தாகும்.

# பிரிட்டிஷ் அரசிற்கு போக்லண்ட் சோதனைக்களமா

"பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தில் சூரியனே அஸ்தமிப்பதில்லை" என்று கூறப்பட்ட காலமொன்றுண்டு. அந்த பிரிட்டிஷ் அரசிற்கு இன்று சோதனைக்களமாக அமைகின்றது போக்லண்ட் தீவுகள். பல பெரிய நாடுகளைத் தனது கொடியின் கீழ் கொண்டுவந்து ஆண்டு சரித்திரம் படைத்த பிரிட்டனுக்கு சவால்விட்டு நிமிர்ந்து நிற்கின்றது ஆர்ஜன்டீனு. குவாத்தமாலா, நிக்குரக்குவா, எல் சல்வடோர் ஆகிய நாடுகள் மீதிருந்த மக்கள் கவனத்தை இன்று தன் பக்கம் ஈர்த்துள்ளது இலங்கையைவிட ஐந்தில் ஒரு பங்கு சிறிய போக்லண்ட் தீவுகள் கூட்டம்.

### உறுதி

இத்தீவுக்குரிய "உறுதி" கடந்த ஒன்றரை நூற்றுண்டாக பிரிட்டிஷ் வசம் இருந்தபோதும், தனக்கு இத்தீவின் மீது "இறைமை" உண்டென்றும் அதுபற்றி பிரிட்டனிடம் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வுகாண இருபது வருடங்களாக எடுத்த முயற்சியில் தோல்வியே ஏற்பட்டதாகவும் கூறிவரும் ஆர்ஜன்டீனு இரு வாரங்களிற்கு முன்பு இத்தீவுக்கான "உறுதியை"யும் பலாத்காரமாக முடித்துக் கொண்டது. தாம் இழந்த 'உரிமையை' மீட்டுக்கொண்டதாகக் கருதுகிறது ஆர்ஜன்டீனு. (18ம் நூற்றுண்டில் பிரிட்டிஷ் மாலுமி ஒருவர் இத்தீவை முதன் முதலில் கண்டுபிடித்தார். அதைத் தொடர்ந்து 4 வருடங்கள் இத்தீவு ஆர்ஜன்டீனுவின் நிர்வாகத்திலிருந்தது. பின்பு பிரிட்டன் கைப்பற்றிக்கொண்டது.)

### 'லண்டனில் சூடு'

போக்லண்ட் தீவுகள் பறிபோனதைத் தொடர்ந்து லண்டன் மக்கள் சபையில் கடும் சூடு. "ஆர்ஜன்டீனுவின் ஆக்கிரமிப்பை பிரிட்டிஷ் அரசு அறியாதிருந்தது ஏன்? எந்த வித தாக்குதல்களையும் சமாளிக்கக்கூடிய படைப் பிரிவை போக்லண்ட் தீவில் நிறுத்தி வைக்காதது ஏன்? ஏன் அரசு உறங்கியது? ஆர்ஜன்டீனுவின் அபகரிப்பு பிரிட்டனுக்கு அவமானம்!" போன்ற கண்டன அம்புகளுக்கு ஈடுகொடுக்க முடியாமல் வெளிநாட்டமைச்சர் திரு.கரிங்டன் பிரபு,உதவி வெளிநாட்டமைச்சர் திரு. ஹம்பேறி அற்கின்ஸ், இராஜாங்க அமைச்சர் திரு. றிச்சாட் லூயிஸ் ஆகியோர் இராஜினமாச் செய்தனர். இதன் எதிரொலியாக பாதுகாப்பு அமைச்சரும் இராஜினமாச் செய்ய கங்கணம்கட்டிய போதும் பிரதமர் திருமதி மார்க்கிரட் தாட்சர் அவரைச் சாந்தப்படுத்தி "போக்லண்ட் தீவு மீட்பு வேலைகளில் கவனம் செலுத்தும்படி" கேட்டுக் கொண்டார்.

போக்லண்ட் தீவு இழப்புடன் அமைச்சரவையிலும் சிலரை இழக்க நேர்ந்தது பிரிட்டிஷ் அரசின் துர்ப்பாக்கியமே! ஏன், பெருந்தோல்வி என்று கூடக்கூறலாம். இராஜினமாப் படலம் தொடர வைக்க எதிர்க்கட்சிகள் பெரும் முஸ்தீபு. பிரதமர் தாட்சரையும் நாற்காலியைக் காலி செய்யும்படி மடல் வாசிக்கிருர்கள், கண்டன மாலை சூட்டுகிருர்கள். ஆனல் 'இரும்புப்பெண்மணி' இரும்பாகவே இருக்கிருர். தரணம் பார்க்கும் எதிர்க்கட்சிக்கு இவரின் மனஉறுதி உற்சாகத்தை கொடுக்கவில்லை.

### ஆர்ஜன்டீனுவில் எழுச்சி

இதே நேரத்தில் ஆர்ஜன்டீனுவின் பிரபல்யமான வானெலி நிலையமான றேடியோ றிவடாவியா ஜனதிபதியின் காரியாலயத்தைச் சுற்றி நின்று உங்கள் ஆதரவைத் தெரிவியுங்கள் என்று வானெலி திரும்பத் திருப்ப மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தவண்ணமிருக்கின்றது "இறைமை அல்லது இறப்பு" என்று கூறும் சுலோக அட்டைகளையும் நீல, வெள்ளைக் கொடிகளையும் தாங்கியவண்ணம் மக்கள் புவனர்ஸ்அயர்சிற்கு படையெடுக்கிருர்கள். மக்களுக்கு உற்சாகமூட்டிய வண்ணம் வானெலியிருக்கிறது. ஆர்ஜன்டீனு அரசுடன் படைகள் மட்டுமல்ல பொது மக்களும் சேர்ந்து பிரிட்டிஷ் அரசை எதிர்ப்பதற்குத் தயாராகுகிருர்கள்.

### ஆர்ஜன்டீனு

ஆர்ஜன்டீனு நிலப்பரப்பால் பிரிட்டனைவிட கிட்டத்தட்ட 10 மடங்குகள் பெரியது ஆனல் சனத்தொகையிலும் படைப்பலத்திலும் பிரிட்டனை விட கிட்டத்தட்ட 3 மடங்கு குறைந்தது. இறைச்சிக்குப் பெயர்போன ஆர்ஜன்டீனுவில் பயங்கரவாதத்திற்கும் இராணுவகெடுபிடுக்கும் குறைவே இல்லை. 18வயதிற்கு மேற்பட்டோருக்கு இங்கு கட்டாய இராணுவ சேவை உண்டு. ஸ்பானிய மொழிதெரியாதவகளை அனுகரிகமானவர்கள் என ஆர்ஜன்டீனியர் கருதுவார்களாம்.

---

-அராலியூர்க் குரு-

---

வெளிநாட்டவரொருவர் இங்கு தூரஇடத்திற்குப் பஸ் பிரயாணம் மேற்கொள்ளும்போது தனது பாஸ்போட்டைக்காட்டி 'ரிக்கற்' பெற்றுக்கொள்ளவேண்டும். ஆர்ஜன்டீனியர்கள் "அடையாள அட்டை" காட்டி பெற்றுக் கொள்ளவேண்டும். அவ்வளவு தூரம் அங்கு கண்காணிப்பும்! கடுமையும்! உலகத்திலே மிக அகலமான அதாவது 450அடி அகலமான றோட் இதன் தலைநகரான புவனர்ஸ்அயர்ஸில் தான் உண்டு. பெரொன் என்பவர் இந்நாட்டின் தலைவராக இருந்துபின்பு கவிழ்க்கப்பட்டு அவர் தலைமறைவாகி பின்பும் ஆட்சியைக் கைப்பற்றினுர். இவரது மரணத்தையடுத்து இவரது மனைவி அதிகாரத்தைக் கைப்பற்றினுர். அவரைப் புரட்சிச்சதி மூலம் அகற்றியதைத் தொடர்ந்து அங்கு இராணுவ ஆட்சி நீடிக்கின்றது.

### போர்க்கப்பல்கள் அணிவகுப்பு

லண்டனிலிருந்து போர்க் கப்பல்கள் போர்க்லண்ட் தீவுகளை நோக்கி அணிவகுக்கின்றன., இவற்றிற்கு தலைமை தாங்கும் "இன்விசிபிள்" என்ற கப்பலின் நாமம் பிரிட்டிஸ் சரித்திரத்துடன் பின்னிப்பிணைந்து காணப்படுகின்றது. தோற்கடிக்கப்படமுடியாது என்ற நாமத்திற்கேற்ப இப்போர்க்கப்பலும் செயல்படுகின்றது போலும்.

"இன்வின் சிபிள்" கப்பல் பிரிட்டிஷ் கடற்படையின் இறுதிச்சண்டையுடன் சரித்திரத்தொடர்புடையது. முதலாவது உலக மகாயுத்தத்தின் போது சர்ச்சைக்குரிய போக்லண்ட் தீவுக்குக்கிட்ட ஜேர்மன் கப்பலொன்றை 59 அதிகாரிகளுடனும், 961 மாலுமிகள் போர் வீரர்களுடன் மூழ்கடித்த பிரிட்டிஷ் கப்பலிற்கும் பெயர் 'இன்வின்சிபிளாகும்,

ஆர்ஜன்டீனு 4,500 படை வீரர்களை போக்லண்டில் நிறுத்தியுள்ள தெனவும் மேலும் பலரை ஹெலிகொப்டர் மூலம் இறக்கிவருகிறதாம். இவ் எண்ணிக்கை 9000ஆக உயர்ந்திருக்கலாம் என பிரிட்டிஷ் பத்திரிகைகள் கூறுகின்றன. பிரிட்டனின் இரு நீர்மூழ்கிக்கப்பல்கள் நவீன ஏவுகணைகளுடன் போக்லண்ட் தீவை சுற்றுவதாகவும் அப்பத்திரிகைகள் மேலும் கூறுகின்றன. போக்லண்ட் தீவிலிருந்த பிரிட்டிஷ் தேசாதிபதியான திரு. றெக்ஸ்ஹெண்டும் அங்கிருந்த 80 படை வீரர்களும் எங்கே என்பது இதுவரை அறிந்து கொள்ள முடியவில்லை.

### ரியோ ஒப்பந்தம்

ஆர்ஜென்டீனு போக்லண்ட் தீவுகளை கைப்பற்ற பயன்படுத்திய விமானத் தாங்கிக் கப்பல் பிரிட்டனிடம் வாங்கியதாகும். இது போன்ற கப்பல் இது தவிர வேறு எதுவும் அவர்களிடம் இல்லை. அனேகமான போர்க்கப்பல்கள் இவர்களுக்கு வியாபாரம் செய்தது பிரிட்டனே. இவர்களது பலமும், பலவீனமும் பிரிட்டனுக்கு நன்ருக தெரியுமென்ருலும் ஆர்ஜென்டீனு பிரிட்டனை மிரட்டி பணியவைக்கப் பார்க்கிறது. 1947ம் ஆண்டு "ரியோ" ஒப்பந்தத்தை கையில் வைத்திருந்து தனக்கு எந்தெந்த லத்தீன் அமெரிக்க நாடுகள் தோள் கொடுக்குமென்று ஆர்ஜன்டீனு கைவிரல் எண்ணி கணக்குப்பார்க்கிறது. இந்த ஒப்பந்தத்தை சுட்டிக்காட்டி பிரிட்டனை மிரட்டுகின்றது.

இவ்வொப்பந்தந் தான் என்ன? லத்தீன் அமெரிக்க நாடொன்று பிறநாட்டால் தாக்கப்படும்போது ஏனைய லத்தீன் அமெரிக்க நாடுகள் உதவிக்கு செல்ல வேண்டும், என்பதாகும். அனேகமான லத்தீன் அமெரிக்க நாடுகள் "கொடுக்குக்கட்டி" வெளிக்கிட சம்மதம் தெரிவித்துவிட்டன. ஐக்கிய அமெரிக்கா சமாதான ந்தவானக" தன்னை மாற்றிக்கொண்டுள்ளது. கூட்டாளி பிரிட்டனுடன் அது மோத விரும்பவில்லை. ஆர்ஜென்டீனு வெளிவிவகார அமைச்சர் திரு. ஹோஸ்டா மென்டிஸ் றேகன் அரசிடம் தங்களிற்கு உதவிக்கு வரும்படி மண்டாட்டத்திவீடுபட்டும் றேகன் அரசு மறுத்தது ஆர்ஜென்டீனுவுக் கேற்பட்ட "தோல்வி" எனறு தான் கூறவேண்டும்.

### பொருளாதாரத் தடை

பிரிட்டிஷ் அரசின் வேண்டுகோளுக்கிணங்க ஐரோப்பிய பொருளாதார சமூகம் ஆர்ஜன்டீனுவுக்கு ஆயுத பொருளாதார ஏற்றுமதிக்கு "இரும்புத்திரை" போட்டுவிட்டது. இதனுல் சற்றுக்கோபமடைந்த ஆர்ஜன்டீனு இர் நாடுகளின் நடவடிக்கைகளை குறிப்பாக பிரான்ஸ், பெல்ஜியம், இத்தாலிஆகியநாடுகளைகவனிக்கத் தொடங்கியுள்ளது. கனடா, நியூசிலாந்து ஆகிய நாடுகள் ஆர்ஜென்டீனுவுடன் ராஜரிக உறவைத்துண்டித்து தங்கள் எதிர்ப்பை வெளிப்படுச்கியுள்ளன. ஜப்பானும் ஆர்ஜென்டீனுவுக்கு எதிராகப் பொருளாதார "இரும்புத்திரை" யையும் போட்டுவிட்டது. போக்லண்ட் தீவைக் கைப்பற்றிய ஆர்ஜென்டீனுவின் நிலை "ஆப்பிழுத்த குரங்கின்" நிலையாகிவிட்டதுபோல் தெரிகிறது.

### ஹேக்கின் தூது

யுத்தவலயபிரகடனமும் அமுலுக்கு வந்துவிட்டது, யுத்தவலயத்தினுள் எந்தவித கப்பலும் காணப்படவில்லைஎன பிரிட்டிஷ் பாதுகாப்பு அமைச்சு தெரிவிக்கின்றது. இரு நாடுகளுக்குமிடையில் இணக்கத்தையேற்படுத்த அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹேக் புவனர் அயர்ஸிற்கும் லண்டனிற்குமிடையில் பலமுறை பறந்தும் ஈற்றில் சிறகொடிந்த பறவையாகி வாஷிங்டன்

(7ம் பக்கம் பார்க்க)

## இந்திராவின் "நான் கண்ட உண்மை"

மாஸ்கோ. ஏப். 16

பாரதப்பிரதமர் திருமதி இந்திராகாந்தி எழுதிய "நான் கண்ட உண்மை" என்ற புத்தகம், அவரது வேண்டுகோளின் பேரில், தாஜிகிஸ்தானிலுள்ள நூரத் நகர நூலகத்திற்கு, சோவியத் யூனியனிலுள்ள இந்தியத் தூதரக அதிகாரிகளால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது,

புதிதாக எழுந்துள்ள இந்த நகரம், மாபெருப் நீரியல் மின்விசை நிலையத்திட்டத்திற்கு புகழ் பெற்றதாகும்.

பல ஆண்டுகளுக்கு முன்பு, நட்புறவு நூலகம் ஒன்றை நூரக் நகரவாசிகள் நிறுவத் தொடங்கினர். 7000க்கு மேற்பட்ட சோவியத் மற்றும் அயல்நாட்டு எழுத்தாளர்களின் நூல்கள் இங்குள்ளன. அண்மையில் இந்திரா காந்தியின் நூலும் இதில் இடம் பெற்றுள்ளது.

## போக்லண்ட் நெருக்கடி: மோசமான நிலைமை ஏற்படலாம்
# ஜனாதிபதி றீகன் எச்சரிக்கை

வாஷிங்டன்,ஏப் 16

பிரிட்டனும், ஆர்ஜென்டீனாவும், யுத்த ஆயத்தங்களைத் துரிதமாகச் செய்துவருவதால், மோசமான நிலைமை ஏற்படவிருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி றீகன் அச்சம் தெரிவித்துள்ளார்.

ஆர்ஜென்டீனாவிலிருந்து யுத்தக்கப்பல்கள் போக்லண்ட் தீவை நோக்கிப் புறப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், போக்லண்ட்தீவில், பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

போக்லண்ட் தீவிலுள்ள ஆர்ஜென்டீனாத் துருப்புக்கள் யுத்தத்திற்கான சகல ஏற்பாடுகளையும்செய்து வருகின்றன. தினமும் 100 தடவை ஆர்ஜென்டீனாவிலிருந்து விமானங்கள்மூலம், போக்லண்ட் தீவுக்கு ஆயுதங்களும், துருப்புகளும் அனுப்பப்பட்டுவருகின்றன.

இதே சமயம் பிரிட்டனும் யுத்தத்தை ஆரம்பிப்பதற்கான இறுதி நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

போக்லண்ட்தீவுக்கு மேலும் பலயுத்தக்கப்பல்களை அனுப்பி வைக்கப்போவதாக பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் தெரிவித்துள்ளார்.

200 மைல் யுத்தவலயத்தை மீறி ஆர்ஜென்டீனா நடந்து கொண்டால் சமாதானப் பேச்சு வார்த்தைகைவிடப்படும் என்று பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் அறிவித்துள்ளார்.

அதே நேரத்தில் யுத்த ஆயுதங்களை அனுப்புவதற்காக வாடகைக்கு கப்பல்களை பிரிட்டன் அமர்த்தியுள்ளதாக ஒரு செய்தி கூறுகிறது.

இரண்டு நாடுகளிலும் சமாதானப் பேச்சுக்களை முடித்துக் கொண்டு அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க் மீண்டும் புவனர்ஸ் அயர்ஸ் திரும்பியுள்ளார்.

சமாதான பேச்சுவார்த்தையில் பிரிட்டிஷ், ஆர்ஜென்டீனா தலைவர்கள் ஆர்வம் காட்டியுள்ளதாக திரு.அலெக்சாண்டர் ஹெய்க், அமெரிக்க ஜனாதிபதி திரு. றீகனிடம் தெரிவித்துள்ளார்.

அடுத்தவார ஆரம்பத்தில் பிரிட்டனின் யுத்தக் கப்பல்கள் போக்லண்ட் தீவுக்கு 500 மைலை நெருங்கிவிடும் என்று பிரிட்டிஷ் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

போர்க்கப்பலுக்குள்ளேயே துருப்புக்களுக்கு தீவிரபயிற்சி அளிக்கப்பட்டுவருவதாகவும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சமாதான தீர்வுக்கு முதலில் ஆர்ஜென்டீனா போக்லண்டிலிருந்து தனது படைகளை வாபஸ் பெறவேண்டுமென்று மீண்டும் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி தட்சர் அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. அலெக்சாண்டர் ஹெய்க்கிடம் வலியுறுத்தியுள்ளார். (க)

## அணுசக்திஉலைகள்

புதுடில்லி ஏப். 15

இந்தியா இரண்டு துரித அணுசக்தி உலைகளை அமைக்கத்திட்டமிட்டுள்ளது. (வெ)

# பாரதத்துக்கு பிரெஞ்சு போர் விமானங்கள்!

புதுடில்லி. ஏப். 16

பிரான்சிடமிருந்து போர் விமானங்களை பாரதம் கொள்முதல் செய்வதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது.

300 கோடி அமெரிக் டாலர் பெறுமதியான 'மிராஜ்' ரக 200 போர் விமானங்களை பாரதம் கொள்முதல் செய்யும்.

பாரதத்தில் போர்விமானங்களை உற்பத்தி செய்யவும், உடன்படிக்கை வழிவகுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டது,

பாரதத்தின் தென்பகுதியிலுள்ள உற்பத்தி தொழிற்சாலையில் 110 போர் விமானங்கள் இத்திட்டத்தின்படி உற்பத்தி செய்யப்படும். 'மிராஜ்' 200 போர்விமானங்கள் 1984ம் ஆண்டு பாரதத்திற்கு விநியோகிக்கப்படும். இத்துடன், 530 ஏவுகணைகளும். நவீன உபகரணங்களும் வழங்கப்படும். (க)

## உகண்டாவில் 'பெருமளவில் கொலை, சித்திரவதை!

கம்பாலா, ஏப்.16

உகண்டாவில் பெருமளவு கொலைகள் நடைபெறுவதாக சர்வதேச மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

நூற்றுக்கு அதிகமான கொலைகள் நடந்திருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளதாகவும் படுகொலைகள் பற்றிய விபரம் கிடைக்கவில்லையென்றும், லண்டனிலுள்ள மனித உரிமைகள் சங்கம் தெரிவித்துள்ளது.

சம்பவங்கள் தொடர்பாக விசாரணை செய்ய சுதந்திர ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கானோர் சிறையில் இருக்கும் நிலையில் 8பேர் கொண்ட செஞ்சிலுவைச்சங்க குழு ஒன்று அரசின் உத்தரவின் பேரில் உகண்டாவிலிருந்து வெளியேற்றப்பட்டதையிட்டு சர்வதேச மன்னிப்புச்சபை ஆழ்ந்தகவலை தெரிவித்துள்ளது.

உகண்டாவில் யுத்தம் நடக்காததினால் இனிமேல் செஞ்சிலுவைச் சங்கத்தின் சேவை அவசியமில்லை என்று அரசு தெரிவித்துள்ளது. (க)

## வளைகுடாப் பிரச்னை

லண்டன், ஏப்.16

வளைகுடாப் பிரச்னையை தீர்த்துவைக்க ஈராக் தயாராக இருக்கிறது என்று ஈராக் ஜனாதிபதி சதாம் ஹூஸைன் அணிசேராஇயக்க நாடுகளின் சமாதான குழுவிடம் தெரிவித்தார்.

18 மாதகால வளைகுடாப் பிரச்னைக்குத் தீர்வுகாணும் பொருட்டு சமாதான குழுவின் ஈராக்கிற்கான3 நாள் விஜயம் நேற்று முடிவடைந்தது. (க)

## முல்லைத்தீவு-- பருத்தித்துறை புதியபஸ்சேவை

(கரவெட்டி)

நெடுங்காலமாக முல்லைத்தீவில் வாழும் வடமராட்சி மக்களினதும், கச்சேரி ஊழியர்களினதும் கோரிக்கைக்கு இணங்க முல்லைத்தீவு பஸ்சாலையினால் முல்லைத்தீவு-பருத்தித்துறை பஸ் சேவை ஒன்று புதிதாக ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை சாலை அத்தியட்சகர் திரு. சு. மணிவாசகன், பிராந்திய முகாமையாளர் திரு. வே. ஸ்ரீஸ்கந்தரா்சா ஆகியோர் மேற்கொண்டு வருகின்றார்கள்.

## சோவியத் ஜனாதிபதிக்கு கடும் சுகவீனம்

மாஸ்கோ, ஏப், 16

சோவியத் ஜனாதிபதி திரு. பிரஸ்னேவ் கடும் சுகவீனமுற்றிருப்பதாகக் கருதப்படுகின்றது.

அவரது சுகவீனம் குறித்து பத்திரிகையாளர் மாநாட்டில் விபரம் வெளியிடுவதற்கு வரவிருந்த பேராசிரியர் ஒருவர் கடைசி நிமிடத்தில் வரத்தவறியதால் திரு. பிரஸ்னேவுக்கு சுகவீனம் கடுமையாயிருக்கக் கூடும் என்று பத்திரிகையாளர்கள் கருத்து வெளியிட்டனர்.

திரு. பிரஸ்னேவ் விடுமுறையைக் கழித்து வருவதாகவே அதிகாரப்பூர்வமாகக் கூறப்பட்டது.

## சீன - இந்தியப் பிரச்னையில்
# இருதரப்பும் விட்டுக் கொடுக்கவேண்டும்!
## நரசிம்மராவ் கருத்து

டோக்கியோ, ஏப். 16

"சீனாவுடனான உறவுகளை சீர்செய்துகொள்ளவே இந்தியா விரும்புகின்றது. இரு நாடுகளுக்கு மிடையிலான எல்லைப்பிரச்னையே முக்கியமாகும்.

இவ்வாறு இந்திய வெளி உறவு அமைச்சர் திரு. நரசிம்மராவ் கூறினார். ஜப்பானுக்கு உத்தியோக ரீதியிலான விஜயம் ஒன்றை மேற்கொண்டு வந்துள்ள திரு. நரசிம்மராவ் இருதரப்பிலும் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருந்தால் மட்டுமே பிரச்னைகளுக்குத் தீர்வுகான முடியும் என்று திரு. நரசிம்மராவ் கூறினார்.

## "சிறந்த வாழ்க்கைமுறையை எடுத்துக் காட்டியவர்"

(புலோலி)

"பக்திமார்க்கம் மக்களைப் பேரின்பப் பேற்றினை அடைய வழிவகுக்கின்றது. பக்தியை வளர்த்துப்பேரின்பப் பெருவாழ்வை அடைவதற்குரிய வழிகளை நாம் மேற்கொள்ள வேண்டும். அடியார்களின் ஆழ்ந்த பக்தியினாலேயே ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் என்னும் ஸ்தாபனம் உருவாக்கப்பட்டது."

இவ்வாறு பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா தேவாச்சிரமத்திற்கு விஜயம் செய்த மட்டக்களப்பு ஸ்ரீ இராமகிருஷ்ண மிஷன் ஸ்ரீமத் சுவாமி ஜீவானந்தர். அடியார்கள் மத்தியில் உரையாற்றும்போது குறிப்பிட்டார். சுவாமி சித்ருபானந்தா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தொடர்ந்து உரையாற்றிய ஸ்ரீமத்சுவாமி ஜீவானந்தர், "இராமகிருஷ்ணர் உலக மக்களுககுச் சிறந்த வாழ்க்கை முறைகளை எடுத்துக்காட்டியுள்ளார். அவ்வாழ்க்கை முறைகளை நாமும் மேற்கொள்ளவேண்டும். இங்கு அமைக்கப்பட்டுவரும் பிரார்த்தனை மண்டபம் இப்பகுதிமக்களின் வாழ்க்கையை வளம் படுத்துவதற்கும் மிக இன்றியமையாததாக இருக்கும். எனவே இப்பகுதிமக்கள் தம் மாலியன்றஉதவி, ஒத்தாசைகளைவழங்கவேண்டும்" என்றார். (அ)

## சதாவதானி நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

சதாவதானி நா. கதிரைவேற்பிள்ளையின் 75-வது ஆண்டு நினைவுவிழா இன்று சனிக்கிழமை மாலை கொண்டாடப்படவிருக்கின்றது.

பருத்தித்துறை சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலையத்தலைவர் திரு.மு. பொ. வீரவாகு தலைமையில் நடைபெறவிருக்கும்மேற்படி நினைவு விழாவில் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் திரு. க. ஞானச்சந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

விழா நிகழ்ச்சிகளில் சிறப்புரைகள், மெல்லிசை, விவாத அரங்கு, கவியரங்கு, கலை நிகழ்ச்சிகள் ஆகியன இடம் பெறவிருக்கின்றன. (கி)

## ஆப்கானிஸ்தான் பொருளாதார கலாசார வளர்ச்சி: ஜனநாயககட்சி மாநாடு தீர்மானம்

காபுல், ஏப். 16

இங்கு நடைபெற்ற மக்கள் ஜனநாயகக் கட்சியின் தேசிய மாநாட்டில் அதிகமானவர்கள் கலந்து கொண்டனர். ஏப்ரல் புரட்சிக்குப் பின்னர் அதிகமான பிரதிநிதிகள் கலந்து கொண்ட மிகப்பெரிய மகாநாடு இதுதான் என்று அவதானிகள் தெரிவித்தன.

ஆப்கானிஸ்தானின் பல்வேறு மகாணங்களிலிருந்தும், நகரங்களிலிருந்தும் ஏராளமான பிரதிநிதிகள் இம் மகாநாட்டில் கலந்துகொண்டனர். பல்வேறு தேசிய இனங்களினதும் பிரதிநிதிகளும் தொழிலாளர்கள், விவசாயிகள் அரசு ஊழியர்கள் மற்றும் பிரதிநிதிகளும் இந்த மகாநாட்டில் கலந்து கொண்டனர். இம் மகாநாட்டில் நடைமுறை வேலைத் திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது, கட்சியின் பொதுவான வழிமார்க்கத்தையும், புதிய ஆப்கானிஸ்தானை நிர்மாணிப்பதற்கான உபாயங்களையும் இத் திட்டம் வெளிக் காட்டுவதாயிருந்தது.

கட்சியின் சமூக - பொருளாதார கொள்கையின் பிரதான போக்குகளை பிரதிபலிக்கும் இந்த நடைமுறை வேலைத் திட்டம், விவசாய வளர்ச்சிக்கும். நாட்டின் ஜனத்தொகையில் 85 சத வீதத்தைக் கொண்டிருக்கும் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கும் முன்னுரிமை வழங்குகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

இன, மத. வேறுபாடுகளின் சகல மக்களினதும் சமத்துவத்தை உத்தரவாதப்படுத்துவதும், பொருளாதார, கலாசார வளர்ச்சியும்தான் பொது இலக்காக அமைக்கப்பட்டுள்ளது,

## அறிவித்தல்

'ஈழநாடு' காரியாலயத்தின் சகல பிரிவுகளும் 63, சிவன்கோவில் மேற்குவீதி, (மானிப்பாய் வீதி) கட்டிடத்தில் வழமைபோல் செயல்படுகின்றன என்பதை அறியத்தருகின்றோம். விளம்பரம்-மற்றும் ஏனைய சகல விடயங்களுக்கும் இதே முகவரியில் தொடர்புகொள்ளவும். இரவு- பகல் டெலிபோன் தொடர்புகளுக்கு 8126 மட்டும்.

நிர்வாகி.

# “பாரதிகாட்டியஒற்றுமை-ஒருமைப்பாடு இன்று நமக்குத் தேவை”

## நூற்றாண்டு விழாவில் உடுப்பிட்டி எம். பி.

(கரவெட்டி)

''பாரதி காட்டிய சுதந்திர வேட்கையில் ஒற்றுமையும், ஒருமைப்பாடும் அபாரமாகப் பிரதிபலித்தது. இன்று எமது நாட்டையும் இனத்தையும் பொறுத்தமட்டில் தமிழ் இனத்தின் உரிமைகள்பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமானால் பாரதி வலியுறுத்திய இந்த ஒற்றுமையும், ஒருமைப்பாடும் தமிழ் மக்கள் மத்தியில் கட்டுக்கோப்பான முறையில்அமைய வேண்டியது அவசியமானது''.

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி. திரு த. இராசலிங்கம் இமையாணன் வீரகத்தி விநாயகர் கிராம அபிவிருத்திச் சங்கம் கொண்டாடிய பாரதி நூற்றாண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

உடுப்பிட்டி எம்.பி. இராசலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

தமிழ் பேசும்நல்லுலகு தூங்கிக் கிடந்த தமிழகத்தைத் தட்டி எழுப்பிய மகாகவி பாரதிக்கு நூற்றாண்டு விழா எடுக்கும் இக் கட்டத்தில், ஈழத் தமிழகத்தில் மூலைமுடுக்குகளெல்லாம் அப்பாரதியின் பெயரால் நூற்றாண்டு விழா எடுத்து அவன் இலட்சிய முழக்கத்தை பிரதிபலிக்கச் செய்வது சாலப்பொருத்தமானதொன்றாகும்.

பாரதி வாழ்ந்த காலத்தில், பாரதி இசை பாடிய காலத்தில், பாரதி இலட்சிய முழக்கம் செய்த காலத்தில், பாரதி சுதந்திர உணர்வை ஊட்ட வேண்டும் என்று விரும்பிய காலத்தில் தமிழகம் இருள் சூழ்ந்த பிரதேசமாக, ஏனைய இந்திய மாவட்டங்களோடு ஒப்பிடுகின்ற நேரத்தில் விடுதலை உணர்வு குறைந்த காலமாக இருந்தது. ஆகையினாலே தான் பாரதி நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று, இலட்சியப்பற்று முதலியவற்றைப் பல கோணங்களுக்கு ஊடாக பாமரமக்கள் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் கவிதைக்கூடாக சுதந்திர உணர்வை தமிழகத்தில் ஊட்டினார்.

இந்த நிலை பாரதியின் விழாவைப் பொறுத்தமட்டில் நூற்றாண்டு விழாவாக இருந்தும் கூட எமது நாட்டைப் பொறுத்த வரையில் இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களது அரசியல், சமூக, பொருளாதார வாழ்க்கையைப் பொறுத்தமட்டில் இழந்த இறைமையை மீளப்பெற வேண்டுமென உரிமைப் போராட்டம் நடத்தி சுதந்திரப் பாதையை நோக்கி தமிழ் சமுதாயம் பீடு நடைபோடும் காலகட்டமாக இருக்கின்றது. எனவே மூலை முடுக்குகளெல்லாம் எடுக்கப்படும் பாரதி விழா மூலமாக ஒலிக்கப்படுகின்ற பாரதியின்கொள்கைகள் ஈழத்திருநாட்டில் வாழ்ந்தும் சுதந்திரதாகமற்று தூங்கிக் கிடக்கும் தமிழ் சமுதாயத்தினரையும் தட்டிஎழுப்பும் என்பதில் இன்றைய காலகட்டத்தில் இது ஒரு பொருத்தமான நிகழ்ச்சியாக அமைகின்றது.

பாரதிக்கு விழா எடுத்தால் போதாது. பாரதியின் விழாவை ஒரு கலாசார நிகழ்ச்சியாக மேற்கொண்டு பொழுது போக்காக அமைத்துவிட்டால் போதாது, பாரதி கண்டசுதந்திர தாகம், விடுதலைஉணர்வு, நாட்டுப்பற்று, சமுதாயசமத்துவம் முதலிய பல்வேறு இலட்சியங்களை கனவாக, கற்பனையாக, பேச்சாகப் படிக்க விடாமல் வாழ்க்கையின் முக்கியமான அம்சமாகக் கடைப்பிடித்துவாழ்ந்துகாட்ட வேண்டியது பாரதிக்கு நூற்றாண்டு எடுக்கும் ஒவ்வொரு தமிழ் மகனதும் கடமையாகும்.

''தமிழ் இனத்தின் உரிமைகள் பேணிப்பாதுகாக்கப்பட வேண்டுமானால் பாரதி வலியுறுத்திய ஒற்றுமையும், ஒருமைப்பாடும் தமிழ் மக்கள் மத்தியில் கட்டுக்கோப்பான முறையில் அமைய வேண்டியது அவசியமானது. நாங்கள் இதனை கட்டுக்கோப்பான இயக்கத்திற்கூடாகவழிநடத்த வேண்டியது அவசியமானது. அந்த முறையில் இந்த நாட்டில் தமிழ் மக்களிடையே தமிழ் மக்களை வழி நடத்திச் செல்லும் தலைவர்கள் தகுதி வாய்ந்தவர்கள். அவர்களின் வழி நடத்தலில் இனத்தின் விடுதலை நடவடிக்கைதொடர வேண்டும்'' என்றார்.

யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு மு. தம்பிமுத்து உட்பட பலர் பேசினார்கள். கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

---

### பனம்பொருள் உற்பத்தியில்

# ‘உருப்படியான சில சாதனை புரிந்தவர்”

## ப.பொ. அ. சபை தலைவருக்கு பாராட்டு

(கரவெட்டி)

''எமதுசமூகத்தின் வரலாற்றில் நிர்வாகரீதியாக உயர் பதவியொன்று எமது சமூகத் தலைவருக்கு கிடைத்திருப்பது இதுவே முதற்தடவையாகும். இப் பதவியைப் பெற்ற திரு. க. நடராசா கடந்த 25 வருடகாலமாக தமிழ்மக்களின் விடுதலைக்காக உழைத்துவரும் இயக்கத்தைச் சேர்ந்தவராக இருப்பதுடன் பனம்பொருள் உற்பத்தியில உருப்படியாக சில திட்டங்களை அமுலாக்கி வெற்றிகண்டவரும் ஆவார். இப் பதவி இவருக்குப் பொருத்தமானதே'' ஆகும்.

இவ்வாறு தென்மராட்சி சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு இயக்கத்தலைவர் திரு. தர்மலிங்கம் பனம்பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு, கே. நடராசாவிற்கு சாவகச்சேரியில் அளிக்கப்பட்ட வரவேற்புவிழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

கைதடியில் பனஞ்சாராய வடிசாலையை நிறுவியும் உலகச் சந்தையில் சீனித் தட்டுப்பாடு நிலவியகாலத்தில் வடபகுதியில் 1975—1976ம் ஆண்டுகாலப் பகுதியில் பல பனம்வெல்ல உற்பத்தித் தொழிற்சாலைகளையும் ஆரம்பித்து செயற்படுத்தியும் திரு. கே. நடராசா சாதனைகள் புரிந்துள்ளார். அவர் பல்வேறு பனம்பொருள் உற்பத்தி அபிவிருத்தித் திட்டங்களைச் செயற்படுத்தி வருவதன்மூலம் சமூக, பொருளாதார விமோசனத்திற்கும் வழிவகுத்துள்ளார் என்று திரு. தர்மலிங்கம் மேலும கூறினார்.

மன்னார் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. சி. பற்குணம் பேசும்பொழுது ''யாழ்ப்பாணத்தில் விசித்திரமான போராட்டமுறையைக் காணக்கூடியதாகவுள்ளது. தமிழர்கள் தமது உரிமையைப் பெற வீரமரணம் எனக் கூறுபவர்கள் எமது சமூகத்தவர்களுக்கு இன்னல்கள் ஏற்படும்போது அறவழிப் போராட்டம் என்கிறார்கள். எமது சமூகத்தவர்கள் உயர் பதவி நியமனங்களின்போது விருப்பமோ, அக்கறையோ காட்ட முன்வராததன் மூலம் தலைவர்கள் உண்மையில் சிறுபான்மைச் சமூக மக்களின் அடிப்படைப் பிரச்னைகளுக்குத் தீர்வுகாணவிரும்பவில்லை என்பதை உணரமுடிகின்றது'' என்று கூறினார்.

பனம்பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசா தனக்களிக்கப்பட்ட பாராட்டுக்கு நன்றிதெரிவித்துப்பேசுகையில்; ''எதுவித கட்சி வேறுபாடுகளும் இன்றிச் சமூகமக்கள் ஒன்றிணைந்து எனக்கு இவ் வரவேற்பை அளித்துள்ளமை எனது பணியை மேலும் சிறப்பாக தொடர உற்சாகமூட்டுகின்றது. என்னாலியன்றவரை பனைவளத்தை அபிவிருத்தி செய்து பனையை நம்பிஉள்ள மக்களின் வளத்தையும் வடக்கு, கிழக்குப்பகுதிகளின் வளத்தையும் உயர்த்தஉழைப்பேன் என்றும் இப்பணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பூரண ஒத்துழைப்பு தமக்கு இருப்பதாகவும் தெரிவித்தார்.

யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு. சு. நடேசு, பனம்பொருள் அபிவிருத்திச்சபைப் பணிப்பாளர் திரு. எம். எஸ். அலக்சாண்டர், டாக்டர் பிலிப், டாக்டர் சின்னப்பு, திரு. மார்க்கண்டு, திரு. தவசிப்பிள்ளை ஜே. பி., அறவழிப் போராட்டக் குழு இணைச்செயலாளர் திரு.ச. பரராசாஆகியோரும்பேசினர்.

---

# “உரிமைமறுக்கப்பட்ட மக்கள்

## அனைவரும் ஒன்றுபட வேண்டும்”

(அரியாலை)

‘இந்த நாட்டில் வாழும் ஒடுக்கப்படும் மக்கள் அனுபவிக்கும் சகல உரிமைகளும் நீண்டகாலப் போராட்டத்தின்மூலம் பெற்றவையாகும். நாம் இன்று அனுபவிக்கும் சர்வஜன வாக்குரிமையைக் கூடத் தமிழ்த்தலைவர்கள் அன்று எதிர்த்த பொழுது நமது தலைவரான அமரர் யோவேல் போல் வட இலங்கையில் அன்று வாழ்ந்த முற்போக்குக் கொள்கையுடைய பெரியார்களுடனும், தென்னிலங்கையிலுள்ள இடதுசாரி இயக்கங்களுடனும் இணைந்து நடாத்திய நீண்டபோராட்டத்தின் மூலமே பெறமுடிந்தது.’

இவ்வாறு அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபைப் பொதுச்செயலாளர் திரு. க. கிருஷ்ணராசா மட்டுவில் தெற்கில் நடைபெற்ற அகில இலங்கைத் திருவருள்ளுவர் மகாசபையின் தென்மராட்சிக் கிளையின் ஏழாவது மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

கிளைத் தலைவர் திரு. ஆ. திரவியநாயகம் தலைமையில் நடைபெற்ற மகாநாட்டில் திரு. க. கிருஷ்ணராசா தொடர்ந்து பேசுகையில், பாடசாலைகளை அரச தேசியமயமாக்கினால்தான் உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் பிள்ளைகள் உயர்சாதிமக்களின் கோட்டைகளாக விளங்கிய பாடசாலைகளில் சமனாக இருந்து படிக்கவும், படிப்பிக்கவும் ஏற்ற சூழ்நிலை ஏற்பட்டது. சாந்தி பிறந்த நாட்டில் சாதியின் பெயரால் சமீப காலமாக நடைபெறும் கொடுமைகள் இந்த நாட்டில் வாழும் ஒடுக்கப்படும் மக்களுக்கு எச்சரிக்கையாக அமைகிறது.

எம்மைக் கூறுபோடுவதற்காக அரசியல் கட்சிகள் அவ்வப்போது வழங்கும் சில சலுகைளுக்காக எம்மை அழித்துக்கொள்ளாமல் இந்த நாட்டில் வாழும் உரிமைகள் மறுக்கப்பட்ட சகல இன மக்களும் ஒன்றுபடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதன் மூலமே நாம் இழந்த உரிமைகளை வென்றெடுக்கமுடியும்.’

திரு. சுப்பையா பேசுகையில் கூறியதாவது:-

‘மட்டுவில் அம்மன்கோவில், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் போன்ற ஆலயங்களைத் திறந்து விடச்செய்வதற்காக நாம் நீண்ட போராட்டங்களை நடாத்தவேண்டி ஏற்பட்டது. திறந்துவிடுவதற்கு முன்னர் மட்டுவில் அம்மன் கோவிலில் பாடப்பட்ட பாடல்கள், இன்று சர்வாலயம் திறந்துவிடப்பட்டபின்னர் பாடப்படுவதில்லை. தமிழ் மக்கள் வாழும் வடபகுதியில் பல கோணங்களில் சாதிப் பூசல்களும், சாதியின் பெயரால் ஆங்காங்கே சண்டைகளும் நடைபெற்றவருவதை நாம் மறந்துவிடமுடியாது. எம்மவர் மீது சாதியின் பெயரால் எங்கு தாக்குதல்கள் ஏற்பட்டாலும அதனை எதிர்த்துப் போராட, எதிர்த்துக் குரல் கொடுக்க நாம் ஒன்றுபடவேண்டும்.’

திரு. தர்மலிங்கம், திரு. வெ. மார்க்கண்டு, வைத்திய கலாநிதி பிலிப்ஸ், ஆசிரியர் சுப்பிரமணியம் உட்படப் பலர் உரைநிகழ்த்தினார்கள். ஆசிரியர் இராசையா நன்றி கூறினார். (க)

---

## நீதி அமைச்சர் கிளிநொச்சி விஜயம்

(கரவெட்டி)

நீதிஅமைச்சர் திரு. நிஸங்கா விஜயரத்ன அடுத்த மாதம் 3ம் திகதி கிளிநொச்சித் தொகுதிக்கு விஜயம்செய்யவுள்ளார்.

கிளிநொச்சியில் நிறுவப்பட்டுள்ள புதிய நீதிமன்றக்கட்டிடத்தைத் திறந்துவைக்கும் முகமாகவே அவர் இங்கு விஜயம்செய்கிறார்.

---

## சைவ சமய அபி. கழகம்

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவில் சைவசமய அபிவிருத்திக் கழகத்தின் 28 வது வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடந்தது. திரு. செ. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்,

போஷகர்கள். பிரம்மஸ்ரீ சீநாராம சாஸ்திரிகள், வைத்திய கலாநிதி கனகரெட்ணம் தலைவர்; ஆர். வி. எஸ். பாலசுப்பிரமணியம், உப தலைவர்கள்: செ. சுப்பிரமணியம், பி. நவரெட்ணராஜா, செயலாளர்: ஏ. செந்தில்குமார், உப செயலாளர்: க. ராஜேந்திரன், பொருளாளர்: மா. கணேசலிங்கம். பரீட்சைச் செயலாளர்; நூலகர் வ. கந்தசாமி சமயப்பிரச்சாரம், நிர்வாக சபை அங்கத்தவர்களும் தெரிவாகினர்.

---

# கூட்டணிகோரிக்கை:

## அமைச்சர் அங்கீகாரம்!

(கரவெட்டி)

கூட்டணி எம். பி.க்கள் போக்குவரத்து அமைச்சரிடம் விடுத்தகோரிக்கையைத் தொடர்ந்து வடபிராந்திய போக்குவரத்துச்சபையின் பொதுமுகாமையாளராக முதல்தடவையாக தமிழர் ஒருவர்நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. ஆர். இராஜேந்திரன் என்பவரே வடபிராந்திய போக்குவரத்துச்சபை பொது முகாமையாளராகப் பொறுப்பேற்று இருக்கிறார். இவர் முன்னர் சாலை அத்தியட்சகராகவும், பிரதேசமுகாமையாளராகவும், செயலாற்று முகாமையாளராகவும் பணியாற்றியுள்ளார்.

போக்குவரத்து அமைச்சர் அண்மையில் வடபகுதிக்கு விஜயம்செய்தபோது, கூட்டணி எம். பிக்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க தமிழ்பேசும் ஒருவரை பொது முகாமையாளரக நியமிப்பதாக வாக்குறுதி அளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

## வறுமையால் தற்கொலை

(துணுக்காய்)

பலகாலமாக வறுமையில் சிக்கிய ஒருவர் விரக்தியுற்றுக் கிருமிநாசினி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார். அச்சுவேலியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் துணுக்காய் கொக்காவில் வீதியில் வசித்து வந்தவருமான இரத்தினமென்பவரே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார். இவர் 7பிள்ளைகளின் தந்தையாவர்.

இப்பிரதேசத்தில்குடியேற்றவாசியாக சுமார் இருபது வருடங்கள் இங்கு வாழ்ந்து வந்த இவருக்கு வாழ்க்கையிலே வறுமை, நெல்வயல்கள் பலனளிக்காமை போன்ற பிரச்னைகள் இருந்துவந்ததுடன் பிள்ளைகளும் நோய்வாய்ப்பட்டிருந்தனராம். இப் பிரச்னைகளைத் தாங்கமுடியாமல் விரக்தியுற்ற இவர் சம்பவதினம் கடைப்பக்கம் சென்று நன்றாக மது அருந்திவிட்டுக் கிருமிநாசினியையும் வாங்கிக் கொண்டு வரும்வழியிலேயே அதைப்பருகி மல்லாவி குளக்கட்டில் இறந்து கிடக்கக்காணப்பட்டார்.

மாங்குளம் அரசினர் வைத்தியசாலையில் பிரேதபரிசோதனை நடைபெற்றது.

மரணவிசாரணையின்பின் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அ)

## மானிப்பாய் ப. நோ. கூ. சங்க

# 7000 உறுப்பினர்கள் கடனுகை பொருட்கள் பெற வசதி

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கத்தில் அங்கத்தவராக இருக்கும் சுமார் 7000 அங்கத்தவர்களின் நலன் கருதி நுகர்ச்சிப் பொருட்களைக் கடனுகை வழங்கும் புதிய திட்டமொன்றை விரைவில் செயல்படுத்துவதென்று தீர்மானித்துள்ளது. இத்திட்டத்தின் பிரகாரம் சங்கத்தில் அங்கத்தவராக உள்ள ஒருவர் தமது பகுதியிலுள்ள சங்கத்தின் கிளையில் இரு நூறு ரூபாவை சேமிப்பு வைப்புக்கணக்கில் செலுத்த வேண்டும். அதைத் தொடர்ந்து அக்கிளையில் தமக்குத் தேவையான நுகர்ச்சிப் பொருட்களைக் கடனுகைப்பெற்றுக்கொள்ளமுடியும். 500 ரூபாவுக்கு மேற்படாது கடனுகப் பொருட்களைக்கொள்வனவு செய்யலாம்.

இத்திட்டத்தின்படி மாதம் தோறும் தமது கடன் பணத்தை முறையாகச் செலுத்திவிட்டு மீண்டும் மீண்டும் தொடர்ந்து கடனுகைப் பெறலாம்.

சங்கத்தின் இந்தப் புதிய சலுகைத்திட்டத்தைச் சகல அங்கத்தவர்களும் நன்குபயன்படுத்திக்கொள்ளவேண்டும் என்றும், தனியார் கடைகளில் கடனுகைப் பொருட்களை வாங்குவோர் சங்கக்கடைகளிலும் கடனுக்கு வாங்கக்கூடிய தொரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் சங்கத் தலைவர் திரு. ரி. இரத்தினசபாபதி இதுபற்றித் தெரிவித்தார்.

## மருதடி விநாயகர் இரதோற்சவம்

(பண்டத்தரிப்பு)

பிரசித்திபெற்ற மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய இரதோற்சவம் புதுவருடப் பிறப்புத்தினமான புதன்கிழமையன்று நடைபெற்ற போது பல்லாயிரக்கணக்கான பக்தாகள் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல பாகங்களிலுமிருந்து கலந்து கொண்டனர்.

ஆலய வீதியில் சனநெரிசலைப் பயன்படுத்தி நான்கு பேரின் சங்கிலிகள் அறுக்கப்பட்டதாகவும், ஒரு வயோதிப மாதுவின் தாலிக் கொடியைக் காணவில்லை என்றும் தற்காலிகமாக ஆலய வீதியில் நிறுவப்பட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

சாரணர் இயக்கத்தைச் சேர்ந்த சாரணர்களும், சென் ஜோன்ஸ் அப்புலன்ஸ் படை முதலுதவிச் சிகிச்சை முகாமைச் சேர்ந்த தொண்டர்களும் ஆலயத்தில் ஒழுங்கை நிலைநாட்டினார்கள்.

## மகனைத் தந்தை கத்தியால் வெட்டினராம்!

### எதிரிகள் மூவர் பிணையில்

(ஊர்காவற்றுறை)

தந்தையொருவர் தனது தம்பியாரையும் கடைசிமகனையும் துணைக்குச்சேர்த்துக் கொண்டு தனது மூத்தமகனைக் கத்தியால் வெட்டிக்காயம் விளைவித்தாராம். இச்சம்பவம் காரைநகரில் இடம்பெற்றுள்ளது.

காரைநகரைச்சேர்ந்த செல்வராசா என்பவர் தான் கத்தியால் வெட்டப்பட்டது சம்பந்தமாகதனது தகப்பனுக்கும், சிறியதந்தைக்கும்தம்பிக்கும் எதிராக செய்த முறைப்பாட்டையடுத்து ஊர்காவற்றுறைப் பொலிசார் அதே ஊரைச்சேர்ந்தவர்களான கந்தையா, பாலன், கணபதி ஆகியமூவரையும் கைதுசெய்து ஊர்காவற்றுறை நீதவான் திரு. ரி. கே. என். திலகன் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி திரு. எஸ். ே. மகேந்திரன் ஆஜராகி எதிரிகளைப் பிணையில் விடுமாறு கோரினார்.

கோரிக்கையை ஏற்றுக் கொண்ட நீதிபதி எதிரிகளைப் பிணையில் செல்ல அனுமதித்து மேல்விசாரணையை இம்மாதம் 27ந்திகதிக்கு ஒத்திவைத்தார்.

முறைப்பாட்டுக்காரரின் சார்பில் ஊர்காவற்றுறைப் பொலிஸ் சார்ஜன்ட் திரு. நவரத்தினம் ஆஜரானார். (அ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிக் கல்விவட்டம் நாளை, பருத்தித்துறை சென்றல்படமாளிகையில் கருத்தரங்கொன்றை நடாத்தவிருக்கின்றது.

திரு. மு.பொ.வீரவாகு தலைமையில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் 'மாவட்ட அபிவிருத்திச் சபைகள்' என்ற பொருளில் யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா சிறப்புரை நிகழ்த்துவார். (கி)

## கரையில் இறங்க முடியாமல்

# கப்பல்பிரயாணிகள் 4மணிநேரம்தவிப்பு

[மன்னார்]

கப்பல்மார்க்கமாக தலைமன்னார் துறைமுகத்தை வந்தடைந்த பிரயாணிகள் கரையில் இறங்கமுடியாது 4 மணி நேரம் கப்பலிலேயே இருந்தனர்.

கப்பலில் வந்த பிரயாணிகளை வைத்திய பரிசோதனை மேற்கொள்ள டாக்டர்கள் இல்லாததாலேயே பிரயாணிகள் 4 மணிநேரம் கப்பலில் இருந்தனர்.

தலைமன்னார் அரசினர் வைத்தியசாலை டாக்டரே கப்பல் பிரயாணிகளை வைத்தியபரிசோதனைசெய்வது வழக்கம். சம்பவதினம் அவர் லீவில் சென்றிருந்தது யாருக்கும் தெரியாது.

இதனை அறிந்த தலைமன்னார் துறைமுக சுங்க பரிசோதகர்கள் உடனடியாக மன்னார் அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு அறிவித்து அங்கிருந்து ஒரு டாக்டரை வரவழைத்து பிரயாணிகளைவைத்திய பரிசோதனைக்குட்படுத்தினர். இதனால் அன்றையதினம் கப்பலில் வந்த பிரயாணிகள்இரவுரயிலில்செல்லமுடியாது தலைமன்னார் துறைமுகத்தில் தங்கியிருந்து மறுநாள் ரயிலில் தமது சொந்த இடங்களுக்குச் சென்றனர்.

## சனசமூகநிலைய ஆண்டுவிழா

(அரியாலை)

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ நாராயண கிராம அபிவிருத்திச்சங்கத்தினதும், சனசமூக நிலையத்தினதும் முப்பதாவது ஆண்டு விழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக் கிழமை கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் திரு. சி. வாமதேவன் தலைமையில் நடைபெறும்.

தமிழர்விடுதலைக்கூட்டணித் தலைவரும், நல்லூரர் எம். பி. யுமான திரு மு. சிவசிதம்பரம், யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. சு. நடராசா, யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா, நல்லூரர் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சபாபதிப்பிள்ளை ஆகியோர் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள் திருமதி இந்திராணி நாகராஜாபோட்டியில்வெற்றி பெற்றோருக்குப் பரிசில்கள் வழங்குவார்.

## பழையமாணவர் தினம்

(கோண்டாவில்)

கொக்குவில் இந்துக்கல்லூரி பழையமாணவர்கள் தினம் நாளை பாடசாலையில் கொண்டாடப்படுகின்றது. இத்தினத்தை முன்னிட்டு உதைபந்தாட்ட, மென்பந்தாட்ட கரபந்தாட்டப் போட்டிகளும் நடைபெறவுள்ளன சிறப்பு மலரும் வெளியிடப்படும்.

## கப்பல் - பஸ் இணைப்புச் சேவை

(கரவெட்டி)

இலங்கை—இந்திய கப்பல் இணைப்பு பஸ் சேவை ஒன்று வட பிராந்திய போக்குவரத்துச்சபையைச் சேர்ந்த கோண்டாவில் சாலையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இச்சேவை ஒவ்வொரு திங்கள், புதன், வெள்ளிக்கிழமைகளில் காலை 7.30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து தலைமன்னார் வரை செயலாற்றப்படுகிறது. அதேபோல் செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் அதிகாலை 1.00 மணிக்கு தலைமன்னாரில் இருந்து புறப்படும்.

இப்புதிய பஸ்சேவை இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் தலைமன்னார் இறங்குதுறையில் இருந்து நடைபெற்றுவரும் கப்பல் சேவைகளுக்கு அளிக்கப்படும் இணைப்புபஸ் சேவையாகஆரம்பிக்கப்பட்டு செயலாற்றப் பட்டு வருகிறது.


## தேவை

தமிழ்த் தினசரிப் பத்திரிகை ஒன்றின் பத்திரிகை ஆசிரியர் பகுதியில் பணியாற்றக்கூடியவர்கள்தேவை. பத்திரிகைத் துறையில் பத்துவருட அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமையும், ஐந்துவருட அனுபவமுள்ளவர்களுக்கு இரண்டாமிடமும் வழங்கப்படும். தமிழ் — ஆங்கிலத்தில் பாண்டித்தியம் பெற்றிருத்தல் வேண்டும். யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. விண்ணப்பங்கள் யாவும் இரகசியமாக வைத்திருக்கப்படும்.

நிர்வாகி.

விளம்பர இல: 2849
மே/பா ஈழநாடு, த. பெ. 49
யாழ்ப்பாணம்.

2849


# "உப அஞ்சல் அதிபர்களை நிரந்தரமாக்க வேண்டும்"

(பண்டத்தரிப்பு)

''ஏனைய அரசாங்க ஊழியர்களைப்போல உப அஞ்சல் அதிபர்கள் அனைவரையும் விரைவில் நிரந்தரமாக்கி, அவர்களுக்கு இளைப்பாற்றுச் சம்பளம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்''

இவ்வாறு தபால் தந்தித் தொடர்புகள் அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் முக்கிய பிரேரணை ஒன்று நாளைஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள அகில இலங்கை உப தபால் அதிபர்கள் சங்கத்தின் ஒன்பதாவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் நிறைவேற்றப்படுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் ஏனைய பிரேரணைகள் பின்வருமாறு:

உபதபால் அதிபர்களுக்கு ஏனைய அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதைப் போல இலவச புகையிரத 'வாரண்ட்' வழங்கப்பட வேண்டும்.

''விடுதலைப் படியை முழு வேதனத்துடன் சேர்த்து கணக்கிட்டு அதிசரிக்கவேண்டும்.

''கடந்த வரவு செலவுத்திட்டத்தில் அரசாங்கம் அறிவித்திருந்த 45 ரூபா அதிகரிப்புப் படியை உப அஞ்சல் அதிபர்களுக்கும் வழங்க ஆவனசெய்ய வேண்டும்''.

## சங்கிலி திருட்டு!

(கோண்டாவில்)

மருதடி பிள்ளையார் கோவில் தீர்த்த உற்சவத்தின்போது ஒரு குழந்தையின் சங்கிலியை அறுத்தவர், அங்கு கடமையில் ஈடுபட்டிருந்த சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினரினல் துரத்திப் பிடிக்கப்பட்டார்.

கோவிலுக்கு வந்த ஒரு பெண் தனது இரண்டு வயதுக் குழந்தைக்கு நீர் பருக்கிக் கொண்டிருந்தபோது சுமார் மூவாயிரம் ரூபா பெறுமதியான சங்கிலியை ஒரு பெண் அறுத்துக்கொண்டு ஓடியதாகவும் சுமதி என்னும் குறிப்பிட்ட அப் பெண்ணை முதலுதவிப் படையினர் துரத்திப் பிடித்தனர் என்றும் அவரிடமிருந்து குழந்தைப்பிள்ளைகள் அணியும் ஒரு சோடி கைவளையல்கள் மீட்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. இப்பெண் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினரினல் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

## இளைஞர் விழா

(கரவெட்டி)

யாழ். மாவட்ட தேசியஇளைஞர் சேவை மன்றத்தினல் கொண்டாடப்படும் ''இளைஞர் விழா'' அடுத்த மாத நடுப்பகுதியில் சாவகச்சேரியில் நடைபெறவுள்ளது. மூன்று தினங்கள் கொண்டாடப்படவுள்ள இவ்விழாவில் விளையாட்டு, கலாசார நிகழ்ச்சிகள் உட்படப் பல நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளதாக இளைஞர் சேவை மன்ற அலுவலர் மகேஸ்வரி தெரிவித்தார்.

## வாய்க்கால் புனரமைப்பு

(கரவெட்டி)

குடத்தனை புதுக்காட்டு வாய்க்கால் புனரமைப்புச்செய்யப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை தேசிய இளைஞர் சேவை மன்றம் மேற்கொண்டு வருகின்றது.

இம்மாதம் 29ம் திகதி ஆரம்பமாகவுள்ள புனரமைப்பு வேலைகளில் குடத்தனைப்பகுதி இளைஞர், யுவதிகள் ஈடுபடவுள்ளார்கள் என்று இதற்குப் பொறுப்பான இளைஞர் சேவை அலுவலர் செல்விஎஸ். மகேஸ்வரி தெரிவித்தார். (அ)

## சேவை நலம் பாராட்டு

(பண்டத்தரிப்பு)

நவாலி மகாவித்தியாலயத்தில் தொடர்ந்து 21 ஆண்டுகளாக ஆங்கில ஆசிரியையாக கடமையாற்றி பதவியிலிருந்து இளைப்பாறியுள்ள திருமதி த. தேவகடாட்சத்தின் சேவையைப் பாராட்டுமுகமாக சேவைநலம் பாராட்டு விழா வித்தியாலய அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் சிறப்பாக நடத்தப்பட்டது. வித்தியாலய அதிபரும் அபிவிருத்திச் சங்கத் தலைவருமான திரு. ரி. மார்க்கண்டு தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் நவாலி கிராமோதய சபைத் தலைவர் திரு. பரராசசிங்கம் உட்பட மற்றும் பலர்பாராட்டுரை நிகழ்த்திஞர்கள்,

ஹரன் யாழ்.நகர்
தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த், மாதவி
தேங்காய் சீனிவாசன்
சௌகார் ஜானகி
நாகேஷ்
தில்லுமுல்லு

Last 2 Days
Regal
Daily 10-30, 2-15, 4-30, 7-00 9-30
JAMES BOND 007
In
Live and Let Die
With Roger Moore

வெஸ்லி மானிப்பாய்
தினசரி 2.30, 6.15 9.15
கமலஹாசன்
நினைத்தாலே இனிக்கும்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—பத்மினி
மரகதம்

லிடோ தினசரி 4 காட்சிகள்
(யாழ்.நகர்)
எம்.ஜி.ஆர்-சரோஜாதேவி
பெரிய இடதது‌ப் பெண்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 10.30, 2.30, 6.00 and 9.30
சிவாஜி, சாவித்திரி, சந்திரபாபு
காத்தவராயன் (புதிய பிரதி)

ஸ்ரீதர் (யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள்
ரஜனிகாந்த்—ஸ்ரீபிரியா நடித்த
பொல்லாதவன்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி (யாழ்.நகர்) தினசரி 10.30, 2.30, 6.15 9.30
கமலஹாசன் - ரதி நடித்த
உல்லாசப் பறவைகள்
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ்நகர்) தினசரி 5 காட்சிகள்
— 17 — 18
GUY MADISON in
"WAR DEVILS"
an action packed color movie

16-4-82 to 18-4-82
10-30, 2-15, 4-45, 7-00 & 9-30
மனோகரா (யாழ்ப்பாணம்)
URSULA ANDRESS in
THE MOUNTAIN IN THE JUNGLE
C'scope-Brand New Print
(Adults only)

4-வது ஜனத்திரள் வாரம்
வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஒரு சினிமா நடிகைக்கு ஏற்படும் இன்னல்களையும் சோதனைகளையும் இயல்பாகவும் மனதைத்தொடும் வகையிலும் இயக்கியிருக்கும் விதம் இத் திரைப்படத்தின் வெற்றிக்குப் பெரிதும் உதவியுள்ளது.
தெலுங்கில் 500 நாட்களுக்குமேல் ஓடிய 'சிவரஞ்சனி'படத்தின் மறுதயாரிப்புத்தான்
கமலஹாசன்—ரஜனிகாந்த்—சிவாஜி கணேசன்—ஸ்ரீபிரியா—சுபாஷினி—ஹரிபிரசாத்—மோகன்பாபு நாகேஷ் மற்றும் பலர் நடித்த
★நட்சத்திரம்★
(ஈஸ்மன்ட் கலர்)

# இன்றைய பலன்

சித்திரை மாதம் 4 ம் திகதி

சனிக்கிழமை

(17—4—82)

மேடம்: எழுத்தாளர்களுக்கு சிறப்பான சுபதினம், பத்திரிகைத் தொழிலில் ஈடுபடுபவர்கள் அதிக பயனடைவார்கள், நீண்டநாள் எதிர் எதிர்பார்த்த பொருள் வரவு இன்று கிடைக்கலாம்.

இடபம்: எண்ணம்போல் வாழ்வு இன்று மலரும், சிலருக்கு திடீர் திரவிய லாபமும் கிடைக்கலாம், புத்திரர்களால் புகழ் வந்து சேரும், கலகலப்பான தினம்.

மிதுனம்: குடும்பத்தில் குறை கேட்க நேரிடும், சிலருக்கு விரக்தி மனப்பான்மை தோன்றக்கூடும், கூர்மையான ஆயுதங்களுடன் பழகுபவர் கவனமாக இருக்கவும்.

கடகம்: நலன்தரும் நிகழ்ச்சிகள் இடம்பெறும், குடும்பத்தில் மிக்க மகிழ்ச்சியுண்டு, காதலர்களுக்கு இன்று கனிவான நாள், பெரியோர்களின் ஆதரவு கிடைக்கும்.

சிங்கம்: தொழில் முன்னேற்றம் இன்று தடைப்படும், நண்பர்களால் சிலருக்கு தொல்லை, உடல் நலமும் பாதிக்கப்படும், அவதானமாக இருக்கவும், தெய்வவழிபாடு விரும்பத்தக்கது.

கன்னி: புண்ணிய காரியங்களில் புதிய உற்சாகம் பிறக்கும், ஏழைகளுக்கு இரங்குவதில் முன்நிற்பீர்கள், தெய்வ பக்திக்கும் இடமுண்டு, இன்று நல்ல நாள்.

துலாம்: பலகாலம் எதிர்பார்த்த உதவி உயர்வுக்கு வழிகோலப்படும், சிலருக்கு புதிதாக தொழில் கிடைக்கக்கூடும், வருவாயும் வளரும்.

விருச்சிகம்: நிதியில் நல்ல அபிவிருத்தி காணப்படுகின்றது, நீண்டநாள் கடன் தொல்லை இன்று நிவர்த்தியாகும், கணவன் மனைவி உறவு முறைகள் மகிழ்ச்சி நிறைந்ததாக இருக்கும்.

தனுசு: நிதியில் முடக்கம் ஏற்படும், சிலர் வீண் பழிக்கும் இலக்காவார்கள், விஷமிகளின் தொல்லைகள் புதிய உருவை எடுக்கும், பயிர்ச் செய்கையில் பாதிப்பு ஏற்படலாம்.

மகரம்: அன்னியவாசம் அமைதிக்கு உலைவைக்கும், அபாயகரமான காரியங்களில் ஈடுபடுபவர்கள் மிகவும் அவதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும்.

கும்பம்: கனிவான நினைவுகள் தலைதூக்கும், காதல் விவகாரங்களுக்கும் இடமுண்டு, இனிமையான பேச்சின்மூலம் கடினமான காரியத்தைச் சாதிப்பீர்கள்.

மீனம்: எதிலும் அவசரப் போக்கைக் கடைப்பிடிப்பீர்கள், தரக்குறைவான தகவல்கள் கிடைக்கக்கூடும், பெரியவர் ஒருவரின் கருத்துவேற்றுமை தோன்றலாம்.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

# சுழிபுரத்தில் 4 லட்ச ரூபா செலவில் பனஞ்சீனி தொழிற்சாலை

(பண்டத்தரிப்பு)

சுழிபுரத்தில் நான்கு லட்சம் ரூபாவில் பனம்சீனி உற்பத்தித் தொழிற்சாலையொன்றை நிறுவுவதற்கு வட்டுக்கோட்டைத் தொகுதி தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம் தீர்மானித்துள்ளது.

பதநீரிலிருந்து சீனி தயாரிக்கும் இத்தொழிற்சாலை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்குப் பக்கத்திலுள்ள சங்கத்திற்குச் சொந்தமான கட்டிடத்தில் நிறுவப்படும்.

இத்தொழிற்சாலைக்கான அத்தியாவசிய உபகரணங்கள் கொள்வனவுசெய்யப்பட்டுள்ளதாகவும் ஆகஸ்ட் மாதத்தில் இத்தொழிற்சாலை இயங்க ஆரம்பிக்கும் என்றும் சங்கத் தலைவரும், யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையின் உறுப்பினருமான திரு. சு. நடேசு தெரிவித்தார். (க)

# 50 ரூபா மோசடி வழக்கு: எதிரிக்கு 1 வருடசிறை

(சாவகச்சேரி)

50 ரூபா மோசடி வழக்கில் எதிரிக்கு ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இவ்வழக்கு சாவகச்சேரி நீதிமன்றத்தில் முன்னாள் நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் முன்னிலையில் நடைபெற்றது.

இவ்வழக்கில் கைதடியைச் சேர்ந்த சங்கரப்பிள்ளை சுப்பிரமணியம் என்பவர் இரண்டு இலக்கம் திருத்திய 50 ரூபா நோட்டுகளைச் சட்டவிரோதமாக வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

எதிரி சார்பில் சட்டத்தரணி எவரும் ஆஜராகவில்லை.

விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு நீதிபதி திரு. சீ. வி. விக்னேஸ்வரன் ஒரு வருடக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்தார். (க)

# மகாயாகம் நடைபெறும்

[கொழும்பு]

அகில உலக இந்து மாநாட்டையொட்டி ஆரம்பதினமான 21-ம் திகதி மாலை 6-30 மணிக்கு வெள்ளவத்தை மாணிக்கப்பிள்ளையார் கோவிலில் இந்துமக்களின் சுபிட்சம் கருதியும் நாட்டின் முன்னேற்றம் கருதியும் மகாயாகம் ஒன்று நடைபெறவிருக்கிறது.

அன்று பழைய கதிரேசன் பிள்ளையார் கோவிலிருந்து ஊர்வலம்ஆரம்பமாகி மாணிக்கப்பிள்ளையார் கோவிலை வந்தடையும் இந்த ஊர்வலத்தில் திருமுறைகள் யானை மீது கொண்டுவரப்படும். மட்டு நகர் கலைஞர்களின் கரகம், காவடி ஆட்டமும் ஊர்வலத்தில் இடம்பெறும். பல சைவநிறுவன பிரதிநிதிகளும்கொழும்புமாநகரிலுள்ள இந்துக்கல்லூரி மாணவர்களும் கலந்துகொள்வார்கள்.

அன்று உலக இந்துமாநாட்டு ஞாபகார்த்த முத்திரையை தபால் அமைச்சர் விஜயதுங்கா, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலுள்ள தபால் நிலையத்தில் வெளியிட்டுவைப்பார்.

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

சூரியோதய சனசமூக விளையாட்டரங்கில் இன்றும் நாளையும் விளையாட்டுப் போட்டி நடைபெறும். பரிசளிப்பு வைபவம் நிலையத் தலைவர் திரு. கு. செல்லையா தலைமையில் நடைபெறும். நிலையச் செயலாளர் திரு. எம். கே. இளையப்பு வரவேற்புரை நிகழ்த்துவார், கோப்பாய் தெற்கு கிராமோதய சபைத் தலைவர் திரு. கே. கனகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (கு)

# கூட்டம்

(புலோலி)

புலோலி வேலாயுதம் ஆண்கள் மகாவித்தியாலய பழைய மாணவர்சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை 18-ந் திகதி வித்தியாலய மண்டபத்தில் அதிபர் திரு. வீ. சே. ஏகாம்பரநாதன் தலைமையில் நடைபெறுகிறது.

# மூடப்பட்டிருக்கும் நூலகம்

(கரவெட்டி)

திருத்தப்படுவதற்காக கடந்த ஒருவருடகாலமாக மூடப்பட்ட நிலையில் நெல்லியடி பொது நூல் நிலையம் உள்ளதால் இந் நூல்நிலையத்தில் உள்ள நூல்களை மாணவர்கள், ஆய்வாளர்கள் பயன்படுத்த முடியாது கஷ்டப்படுகிறார்கள்' என்று கரவெட்டி மத்தி கிராமோதய சபை யாழ். மாவட்ட அபிவிருத்தி சபையிடம்முறையிட்டுள்ளது.

இக்கிராமோதய சபையின் மாதாந்தக்கூட்டம் கரவெட்டி திருஇருதயக் கல்லூரியில் அதன் தலைவர் திரு. இ. முத்துத்தம்பி தலைமையில் நடைபெற்றபோதே இதற்கான தீர்மானம்நிறைவேற்றப்பட்டது.

அத் தீர்மானத்தில் பிரஸ்தாப நூலகத்தை விரைவில் கட்டிமுடிக்க வேண்டும் அல்லது வேறுவழிகளில் இங்குள்ள நூல்களை வாசகர்கள் பயன்படுத்தக்கூடியதாகச் செய்ய வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள கரவெட்டி சாமியன் அரசடி—சோனப்பு ஊடாக கொடிகாமத்திற்கு நடைபெற்று வந்த பஸ் சேவையை மீண்டும் நடாத்த வேண்டும் என்று பருத்தித்துறை சாலை அத்தியட்சகரைக் கோருவது என்றும் தீர்மானிக்கப்பட்டது. (அ)

# சென்.மேரிஸ் கழகம் வெற்றி

(அரியாலை)

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் நடைபெற்ற 'ஏ' பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்ட நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் தெரிவுக் கோஷ்டிக்குமிடையிலான உதைபந்தாட்டப்போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் 4—0 புள்ளிகளால் வெற்றி பெற்றது. யாழ்ப்பாண விளையாட்டரங்கில் இப்போட்டி நடைபெற்றது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில் நடைபெற்ற 'நொக்கவுட்' உதைபந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டது.

ஆறு கழகங்கள் கலந்துகொண்ட 'ஏ' பிரிவுக்கான போட்டியின் அரையிறுதிப் போட்டியில் தெரிவுசெய்யப்பட்ட நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக் கழகமும் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக்கழகமும் சாம்பியன்போட்டியில் போட்டியிட்டன. நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழகம் 1—0 புள்ளியைப் பெற்று சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது. போட்டி யாழ்ப்பாண விளையாட்டரங்கில் நடைபெற்றது.

# கவிஞரின் தந்தை காலமானர்

[யாழ்ப்பாணம்]

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கல்லூரி விரிவுரையாளரும் பிரபல கவிஞருமான இ- முருகையனின் தந்தை கா. இராமுப்பிள்ளை காலமானர்.

கல்வயல் சைவப்பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடமையாற்றியதுடன், திருக்கேதீச்சரம் கௌரியம்பாள் வித்தியாலயத்தில் அதிபராகவும் இவர் கடமையாற்றினர். சாவகச்சேரி கல்வயல் பெருங்குளப்பிள்ளையார் கோயில் தர்மகர்த்தாவுமாவார்.

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நாயன்மார்கட்டு ஆஸ்பத்திரிக்குஅருகாமையில் 10பரப்பு வீடு கட்டுவதற்குரிய காணி உண்டு. விபரங்கட்கு! நாயன் மார்கட்டு வைத்தியசாலை டாக்டர் உமாகாந்தனிடம் தொடர்பு கொள்ளவும். 2864

---

மானிப்பாய் பட்டினசபை எல்லைக்குள் மானிப்பாய் இந்துக் கல்லூரி முன் ஒழுங்கையில், 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. ஆலடிச் சந்தி, வே. சி. கந்தையா, (தேனீர்க் கடை) அவர்களிடம் விபரங்களை அறியவும். 2867

---

A 40 கார் விற்பனைக்குண்டு. ஹொண்டா 90 க்கு மாற்றி அமைக்கலாம். தொடர்பு: க. செ. கணபதிப்பிள்ளை, 51, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 2879

---

சுன்னுகம் தெற்கு சிவபூதராயர் கோவில் ஒழுங்கையில் வீடுகட்டுவதற்கு உகந்த பதினெரு பரப்புப்பனங்காணி விற்கப்படும். விளம்பர இல. 2821 மே/பா. ஈழநாடு, த.பெ. எண். 49, யாழ்ப்பாணம். 2821

---

## வாடகைக்கு

சாவகச்சேரி கென்ஸ்மன் வீதியில் மின்சார, நீர் வசதிகள் கொண்ட வீடு வாடகைக்குக் கொடுக்கப்படும். சாவகச்சேரி மத்திய சந்தைக்கு அண்மையிலுள்ளது. விலாசம்: சத்தியநாதன், 92/5, தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. 2871

## சங்கக்கட்டிடம் தூங்குகிறது

(பண்டத்தரிப்பு)

வடலியடைப்பு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கென கைத்தொழில் மண்டபத்துடன் கூடிய நிரந்தரக் கட்டிடம் சுமார் 75 ஆயிரம் ரூபா செலவில் நிறுவப்பட்டு ஆறு மாத காலமாகியும் இதுவரை திறந்து வைக்கப்படவில்லை.

வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு கடந்த வருடபன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தின் கீழ் இதற்கான நிதியை ஒதுக்கீடுசெய்திருந்தார்.

## அளவெட்டி தெற்கு கலைவாணி ஜனசமூக நிலையம்

வருடாந்த விளையாட்டுப் போட்டி 14-4-82ல் நடைபெற்ற அதிஸ்ட லாபச் சீட்டிற் பரிசில்கள் பெற்ற இலக்கம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1ம் பரிசு | — | 12 |
| 2ம் ,, | — | 1084 |
| 3ம் ,, | — | 76 |
| 4ம் ,, | — | 715 |
| 5ம் ,, | — | 1283 |
| 6ம் ,, | — | 466 |
| 7ம் ,, | — | 1407 |
| 8ம் ,, | — | 216 |
| 9ம் ,, | — | 362 |
| 10ம் ,, | — | 1597 |
| 11ம் ,, | — | 886 |
| 12ம் ,, | — | 821 |
| 13ம் ,, | — | 1601 |
| 14ம் ,, | — | 1102 |
| 15ம் ,, | — | 1545 |
| 16ம் ,, | — | 1067 |
| 17ம் ,, | — | 1311 |

பொதுக் காரியதரிசி
க. சந்திரசேகரம்
2878

## பெண் தொழிலாளர்கள் தேவை!

கிளாஸ் பக்டரி வேலைதெரிந்த பெண் தொழிலாளர்கள் தேவை!

(பழகுபவர்களும் விண்ணப்பிக்கலாம்.)

நாவற்குளி, கைதடி, சாவகச்சேரிப் பகுதிகளில் இருந்து வரும் தொழிலாளர்களுக்கு விசேஷ சலுகை வழங்கப்படும். நேரில் வரவும்.

பெனின் சுலா கிளாஸ் வேக்ஸ் அன்ட் இன்டஸ்றீஸ்

25, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம். 2869

## சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற விற்பனவு விளம்பரம்

வழக்கு இலக்கம்:- ஈடு 5915

வரணி கரம்பைக் குறிஞ்சி, சின்னவன் கந்தன் — வழக்காளி

எதிராக

வரணி கரம்பைக் குறிஞ்சி, கந்தன் செல்லக்கண்டும் — பெண் வள்ளியும் — எதிராளிகள்

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தின் ஈடு 5915ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இரு துண்டுக் காணிகளை (29-04-82) வியாழக் கிழமை முற்பகல் 10-30 மணிக்கு முதலாம் காணியையும், 11-30 மணிக்கு இரண்டாம் காணியையும் அந்தக் காணிகளுக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத் தொகை:-**

முதல் வட்டி ரூ. 1569-00 இன்னும் ரூ. 1200/-க்கு 21-7-80 தொடக்கம் 27-5-81 வரைக்கும் 18வீத வட்டியும் அதன் மேல் முழுத்தொகை இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூ. 500-50 சதம்.

**காணிகளின் விபரம்**

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி வரணி கோவிற்பற்று "இடைக்குறிச்சி இறை" கொட்டைப் பெருவெளியும். மறுபிரிவும் நெ. ப. 60. இதில் தெற்குப் புறமாக நெ. பரப்பு $13\frac{3}{4}$ பதின்மூன்றேமுக்கால் எல்லை கிழக்குத் தெரு, வடக்கு தம்பன் கதிரனுடைய ஆதனம். மேற்கு முருகன் சின்னவனின் உரிமைக்காரருடைய ஆதனம். தெற்கு நாகன் கந்தப்புவுடைய ஆதனம், இந்த எல்லைக்குட்பட்ட வயல், நிலமடங்கலும்.

2. மேற்படி இறை மிசுவகான் நிலப்பரப்பு 7 ஆட்சிப்படி நிலப்பரப்பு 5 குளி 14 இதில் மேற்குப் பக்கமாக 21/48 பங்குக்கு நிலப்பரப்பு 2 குளி $9\frac{1}{2}$ இவைகளுக்கெல்லை. கிழக்கு நாகன் கந்தப்புவுக்குடைய ஆதனம். வடக்கு ஒழுங்கை மேற்கு வாய்க்கால் தெற்கு சித்தர் வீரகத்தியாருடைய ஆதனம். இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள் முழுவதும்.

சாவகச்சேரி.
15-04-82

ப. ரஜினி
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
2866

# பிரிட்டிஷ் அரசிற்கு . . .

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பிவிட்டதாக செய்தி. ஐக்கிய நாடுகளின் பந்தோபஸ்து சபையும் "துருப்புக்களை வாபஸ்பெறும்படி" ஆர்ஜென்டீனுவை கேட்டுள்ளது. பிரிட்டிஸ் அரசும் திரு. ஹேக் மூலம் இதைத்தான் வலியுறுத்துகின்றது. இது தவறும்பட்சத்தில் "போர்முரசு" முழங்கும் என்கிறது.

"போக்லண்ட் மீதான ஆர்ஜென்டீனுவின் இறைமையை அமெரிக்கா அங்கீகரிக்க வேண்டுமென்று" அமெரிக்க குடியரசுக்கட்சி செனட்டரான திரு. ஜெஸ்லி ஜேம்ஸ் றேகன் அரசுக்கு ஒருபுதுவித தலையிடியைக் கொடுக்கத் தொடங்கியுள்ளார். இவர் மேற்கத்திய நாடுகள் தொடர்பான வெளிவிவகார செனட் உபகமிட்டியின் தலைவராவர்.

படைத்துருப்புக்களை முதலில் வாபஸ்பெற மறுத்த ஆர்ஜென்டீனு ஹேக்கின் முயற்சியால் வாபஸ்பெற சம்மதம் தெரிவிக்கின்றது. ஆனுல் போக்லண்ட் தீவுகள் மீது தனக்கு இறைமை உண்டென்பதை பிரிட்டிஷ் அங்கீகரிக்க வேண்டும் என நிபந்தனை விதிக்கிறது. ஆர்ஜென்டீனுவின் தளர்ச்சியையே இது வெளிப்படுத்துகின்றது. ஆர்ஜென்டீனு துருப்புகள் முதலில் வெளியேறவேண்மென "அடம் பிடிக்கும்" பிரிட்டிஷ் போருக்கு ஆயத்தமாகின்றது. ஆர்ஜென்டீனுத்துருப்புகள் வாபஸ் பெறசம்மதம் தெரிவிக்க செய்ததுதான் திரு. ஹேக்கிற்குக் கிடைத்த ஓரளவு வெற்றி. நிக்ஸனிற்கு-ஒரு கிஸிஞ்சர், றேகனிற்கு-ஒரு ஹேக்.

### போக்லண்ட் தீவுகள்

5000 சதுரமைல்களையும் 200 தீவுக்கூட்டங்களையும் பல கற்பாறைகளையும் கொண்டதே இத்தீவாகும். இதன் தலைநகராக போட்ஸ்ரான்லி உள்ளது. கிட்டத்தட்ட 1800 மக்களை கொண்டதே போக்லண்ட்தீவு. மக்கள் ஆங்கிலம், ஸ்பானிஸ் மொழிகளில் சரளமாக உரையாடக்கூடியவர்கள். மீன்பிடித்தல் பிரதான தொழிலாகும். இறைச்சி இத்தீவின் பிரதான வருமானம் தரும் ஒன்ருகும். செம்மறியாடு வளர்த்தலையும் மக்கள் பிரதானமாக மேற்கொள்கிருர்கள். கம்பளியை பிரிட்டன் வாங்கிக் கொள்ளகிறது. இத்தீவுக்கரைகளையண்டி உலகின் பிரதான எண்ணெய் ஏற்றுமதி நாடான சவூதி அரேபியாவை விட இருமடங்கு எண்ணெய்வளம் உண்டென்று பல நாடுகள் கிசு, கிசுக்கின்றன.

### 'கொன்சர்வேட்டிவ் அரசின் ஆயுள் போக்லண்டில்

பிரிட்டிஷ் அரசிற்கு 1956ல் சூயஸ் பிரச்னைக்கு பின்பு 1982-ல் போக்லண்ட் தீவுப் பிரச்னை அதாவது முதல் பிரச்னைக்கு 'வெள்ளிவிழாப் பிரச்னையாக இப்புதியபிரச்னை தோன்றியுள்ளது. போல் தெரிகிறது. கொன்சவேட்டிவ் அரசுக்கு போக்லண்ட்தீவு விவகாரம் மட்டுமல்ல இத்தீவை மீட்கும் வெற்றியில் தான் திருமதி தாட்சரின் அரசு 'உயிர்வாழ்வது' தங்கியுள்ளது. ஏற்கனவே மூவரைபலி கொண்டுவிட்டதே! இப்பிரச்னையில் பிரிட்டிஷ் தோற்ருல் உலக அரங்கில் பிரிட்டிஷ் அரசுக்கு "கரிபூசப்படும்" திருமதி தாட்சர் இருவிதபிரச்சனையை ஒரேநேரத்தில் எதிர்நோக்குகிருர். உலக நாடுகளை விடஎதிர்க்கட்சியான தொழிற்கட்சிதான் போக்லண்ட் தீவு மீட்பை உன்னிப்பாகக் கவனித்து வருகின்றது.

ஆர்ஜன்டீனு ஜனுதிபதி திரு. லியோபோல்டோ ஹல்ரேறியும் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்க்கிரட் தாட்சரும் "போர் முரசு" கொட்டுகிருர்கள். போர்மூண்டால்லண்டன் பிரதான கேந்திரஸ்தானமாக இருப்பதால் "கொமன் வெல்த்" நாடுகளுக்கும் குறிப்பாக வளர்முக நாடுகளுக்கும் ஓரளவு பாதிப்பேற்படலாம். லத்தீன் அமெரிக்காவில் யுத்த மேகங்கள் இருட்டுகின்றன, ஒரு சில தினத்தில் இடிமுழக்கம்' கேட்டால் ஆச்சரியப் படுவதற்கில்லை.

போக்லண்ட் தீவுகளை விட்டு பிரிட்டிஷும் ஆர்ஜெண்டீனுவும் தூரவிலகி அத்தீவுமக்கள் தங்களைத்தாங்களே ஆள விட்டால்தான் நிரந்தர அமைதி லத்தீன் அமெரிக்காவில் நிலவும்.

## புதிய பஸ்சேவை

(வவனியா)

வடபிராந்திய போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த வவனியாச்சாலையால் வவனியா—செட்டிகுளத்திற்கும் இடையில் துடாரிக்குளம் ஊடாக புதிய பஸ் சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்புதிய பஸ் சேவையை வவனியா பிராந்திய முகாமையாளர் திரு. வே. சிறிஸ்கந்தராசா சம்பிரதாய முறைப்படி செட்டிகுளத்தில் இருந்து ஆரம்பித்து வைத்தார். வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம், வவனியா மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. மு. சிற்றம்பலம் ஆகியோரும் இவ் விழாவில் கலந்துகொண்டனர். (கர. நிரு.)

## பாரதி நூற்ருண்டு விழா

(புலோலி)

பொலிகண்டி கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 33-வது ஆண்டுவிழாவும், பாரதி நூற்ருண்டு விழாவும் இம்மாதம் 24-ம் திகதி பலாலிமைதானத்தில் திரு. மு. இராஜமனேகரன் தலைமையில் நடைபெறவுள்ளது. விழாவில பிரதம விருந்தினராக உடுப்பிட்டி எம். பி. திரு. இராசலிங்கமும், சிறப்பு விருந்தினராகப் பருத்தித்துறை நீதவான் திரு. கே. எஸ். பகேசனும் கலந்து கொள்வார்கள்.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபை உறுப்பினர் திரு. மு. தம்பிமுத்து, பருத்தித்துறை உதவி அரச அதிபர் திரு. வை. வேலும்மயிலும், யாழ். மாவட்ட கடற்ருெழில் விரிவாக்க அதிகாரி திரு. ஏ. பிலிட், மற்றும் பலர் சிறப்புரை வழங்குவார்கள்.

## மேலதிக அரசாங்க அதிபராக நியமனம்

(பண்டத்தரிப்பு)

பிரதேச அபிவிருத்தி இந்து கலாசார, தமிழ்மொழி அலுவல்கள் அமைச்சில் உதவிப் பணிப்பாளராக சடமையாற்றிய திரு. கே. கோபாலரத்தினம் இம் மாதம் தொடக்கம் மன்னர் மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். திரு. கோபாலரத்தினம் முன்னர் சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராக தொடர்ந்து ஏழு ஆண்டுகள் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சனசமூகநிலைய ஆண்டுவிழா

(நல்லூர்)

கட்டப்பிராய் கலைமணி சனசமூக நிலையத்தின் 36-வது ஆண்டுவிழாவையொட்டி இல்ல விளையாட்டுப்போட்டிகள் இன்றுநடைபெறுகின்றன.

நிலைய முன்றலில் திரு. இலட்சுமிகாந்தன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிக்கு கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. கு. கிட்ணர் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

## பகிரங்கக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அன்புச் சகோதரத்துவ இயக்க,இலங்கைக்கிளையினர், பகிரங்கக் கூட்டம் ஒன்றை இன்றுமாலை யாழ்,வீரசிங்கம் மட்டபத்தில் நடத்த விருக்கின்றனர்.

இப் பகிரங்கக்கூட்டத்தில் ஜப்பானியப் பிரமுகர் திரு. எச். ஒகுடாவும், சர்வதேச அன்புச்சகோதரத்துவ இயக்கத்தின் யாழ்ப்பாணப் பிரமுகர்களும் உரையாற்ற விருக்கின்றனர்.

சொற்பொழிவுகளைத் தொடர்ந்து கலைஞர் வேல் ஆனந்தன் குழுவினரது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் (கி

## உப அஞ்சல் அதிபர்கள் சங்க ஆண்டுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை உப அஞ்சல் அதிபர்கள் சங்கத்தின் எட்டாவது, ஒன்பதாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் நாளை காலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. கூட்டத்திற்கு சங்கத்தின் தலைவர் திரு அ. கோபாலரத்தினம் தலைமை வகிப்பார். எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வாா.

பாராளுமன்ற உறுப்பினர்களான பண்டிதர் கா. பொ. இரத்தினம். திரு. மு. சிவசிதம்பரம், திரு. வெ. யோகேஸ்வரன், திரு. தா. திருநாவுக்கரசு, திரு. மு. ஆலாலசுந்தரம் ஆகியோரும் யாழ்ப்பாணம் பிரதேச தபால் அத்தியட்சகர் திரு. ஏ. சி. கந்தசாமி, உப அஞ்சல் அதிபர்கள் சங்க முன்னுள் தலைவர் திரு. க. இராஜசிங்கம் ஆகியோரும் இக் கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வார்கள். (கி)

## நைஜீரியாவில் 'நவம்'

(மட்டுவில்)

சாவகச்சேரி எம்.பி.திரு.வி. என். நவரத்தினம், ஈராக்கிலிருந்து நைஜீரியா பயணமானுர்.

ஈராக் பாராளுமன்றத்தில் ஒரு வாரம் விசேட விருந்தினராகத் தங்கியிருந்து, ஈராக் பாராளுமன்றநடவடிக்கைகளை கவனித்து தமக்கு ஆலோசனை வழங்குமாறு ஈராக் பாராளுமன்ற உபசபாநாயகர் டாக்டர் கடாத் விடுத்த அழைப்பை ஏற்றுக் கொண்டதின் பேரிலேயே திரு. நவரத்தினம் ஈராக் சென்றிருந்தார்.

திரு. நவரத்தினம் மார்ச் 27ம் திகதி இலங்கையிலிருந்து புறப்பட்டு சென்னை சென்று தமிழ் நாட்டின் முக்கிய அரசியல் தலைவர்களைச் சந்தித்து உரையாடியதன பின்னர் புதுடில்லி பயணமானுர். புதுடில்லியில் மூன்றுதினங்கள் தங்கியிருந்து ஈராக் சென்ருர். ஈராக்கிலிருந்து கடந்த 11ம் திகதி நைஜீரியா சென்ருர்.

நைஜீரியாவில் சர்வதேசப் பாராளுமன்ற ஒன்றியத்தின் செயற்குழுக் கூட்டம் ஆரம்பமாகியுள்ளது அதில் கலந்து கொள்ளும் திரு. நவரத்தினம் 14-ம் திகதி நைஜீரியா தமிழ்ச் சங்கம் எடுத்த தமிழ் சித்திரைப் புத்தாண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரைநிகழ்த்தினுர், மே மாதம் 1ம் திகதி தாயகம் திரும்புவார்.

## தமிழ் இளைஞர் பேரவை கதம்ப நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

தமிழ் இளைஞர்பேரவையின் ஆதரவில் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் சொற்பொழிவுகளும், கதம்பநிகழ்ச்சிகளும் நடைபெறவிருக்கின்றன.

திரு. மாவை சேனாதிராசா தலைமையில் நடைபெறும் இந் நிகழ்ச்சிகளின்போது திரு. அ. அமிர்தலிங்கம், திரு. மு. சிவசிதம்பரம் ஆகியோரின் சொற்பொழிவுகளும். எழுச்சிக்கீதம் இசைத்தலும் கவியரங்கும் இடம்பெறும். கவிஞர்கள் வாகரைவாணன், மு. ஆலாலசுந்தரம், காசி ஆனந்தன் ஆகியோர் பங்கேற்பர். கலைஞர் வேல் ஆனந்தனின் 'நாட்டியாஞ்சலி' நாட்டியநிகழ்ச்சியும் இடம்பெறும்.

## இ. த. ஆ. சங்கம் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஆட்சிக்குழுக் கூட்டம் யாழ். இந்துக்கல்லூரி மண்டபத்தில் 18ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணி முதல் 8 மணிவரையும் 19ம் திகதி காலை9 மணிக்கும் நடைபெறும்

தலைவர் திரு, டி. எஸ். கே. வணசிங்கா தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் நடப்பாண்டு வேலைத்திட்டம் மற்றும் குழுக்கள் தெரிவு போன்ற நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

சங்கப் பொதுச் செயலாளர் திரு. த. மகாசிவம் ; முன்னாள் நிதிச் செயலாளர் திரு. நா. நடராசா ஆகியோர் வெளிநாடுசென்று வந்ததைப் பாராட்டும் வைபவம் 18ம் திகதி பி.ப. 1 மணிக்குஇடம்பெறும்.


# முதலாவது ஆண்டு நினைவாஞ்சலி



## இளையதம்பி தர்மலிங்கம்

**தோற்றம்: 13-08-1913 மறைவு:28-04-1981**

''நீர் இந்த வேளைதன்னில் சேய்கள் எம்மை மறந்தால் நாம் இந்த மானிலத்தில் ஆறுதல் யாரிடமோ''

தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கும் அன்பு மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள். 41, றக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி, யாழ்ப்பாணம். 2876




'கீதாஞ்சலி' வி. கே. நல்லையாவின் மாணவன் ''கதகளி பரதகலாமணி'' செல்வன் ராதா கிருஷ்ணனின் நடனம் புதுவருட தினத்தன்று அனலைதீவு மகா வித்தியாலய அரங்கில் இடம்பெற்றது. சபையோரின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்றுக் கொண்ட ராதா கிருஷ்ணனின் ஒரு அபிநயத் தோற்றத்தை இங்கு காணலாம்.

## பயிற்சி வகுப்பு

(மட்டக்களப்பு)

கிராம சேவை அலுவலர்களுக்கான பயிற்சி வகுப்பொன்றை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் 19ம் திகதி உள்நாட்டு அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் ஆரம்பித்துவைப்பார்.

அபிவிருத்தித்துறையில் அக்கறை காட்டவும், பொலிஸ் பணி, வனபரிபாலனப் பணி, உணவு உற்பத்தி, பொதுசன உறவு பற்றி விளக்கமளிக்கவும் இப்பயிற்சி வகுப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (க)

# இப்படியும் நடக்கிறது

அவர் ஒரு விவசாயி. பெயர் லூசன்.

விஷயம் என்ன வென்றால்; அவருக்குப் புதிதாக கீழ்த் தாடையில் பற்கள் முளைக்கத் தொடங்கியிருக்கின்றன!

ப்பூ...... பற்கள் முளைப்பது ஒரு அசாதாரண செய்தியா! இதில் என்ன விசேஷம்...... என்று நீங்கள் அங்கலாய்ப்பது எனக்குத் தெரிகிறது. ஆனாலும் இதில் சிறப்பு இல்லாமல் இல்லை.

அந்த விவசாயி சீன நாட்டைச் சேர்ந்தவர். வயது நூற்று ஒன்று (101)! இன்றும் பதினாறு வயது இளைஞன் போல சகல உணவுகளையும் ஒரு 'கை' பார்த்துத்தான் உள்ளே தள்ளுகின்றார்.

காதோடு காதாக: இந்த 'வயோதிப இளைஞர்' எந்தப் பொருளையும் மெல்லாமல் விழுங்குவதில்லையாம்!

'ஊடுருவி'

## அமைச்சர்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதிப்புக்குள்ளாகி, இங்கே வந்த மலையக மக்களுக்கு சகல உதவிகளையும் அளித்து, அவர்களை இங்கு பாதுகாப்பாக வாழ வழி செய்தோம். கிளிநொச்சி அபிவிருத்தி அடைய வேண்டிய ஒரு பிரதேசம் எனவே நகர அபிவிருத்திக்கு என ஒதுக்கப்பட்ட இடங்களில் மக்களை குடியேற்றுவது நல்லதல்ல. இதனால் அபிவிருத்தி பாதிப்படையும்.

நகர அபிவிருத்திக்கு என்று ஒதுக்கப்பட்ட கண்டி வீதிக்கு அண்மையில், பலாத்காரமாக சிலர் குடியேறி அப் பகுதிக்கு 'தொண்டமான் நகர்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

தொண்டமானின் பெயர் சூட்டியது பற்றி எனக்கு ஆட்சேபனையில்லை, கிளிநொச்சித் தொகுதியில் பல குடியேற்றத் திட்டங்கள் உண்டு. அவற்றுக்கு அவரின் பெயரைச் சூட்டலாம். குடியேற்றத்திட்டங்களுக்கு எனது பெயர் சூட்டப்படுவதை நான் விரும்பவில்லை. இப் பிரச்னையை அரசியல் கண்கொண்டு அல்ல நியாய பூர்வமான முறையில் நோக்கி அவற்றினைத் தீர்க்கவேண்டும். கண்டி வீதிக்கு அரைமைல் தொலைவில், குடியேறுபவர்களுக்குக் காணியை வழங்கலாம் என்றார்.

இவரையடுத்து உரையாற்றிய யாழ்.மாவட்ட அபிவிருத்திச் சபைத்தலைவர் திரு, சு. நடராசா ''இப்பிரச்னை நியாய பூர்வமான முறையில் ஆராய்ந்து, அதற்குப் பரிகாரம்காண வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

அமைச்சர்கள் மற்றும் கிளிநொச்சி எம் பி., அரச அதிகாரிகள் ஆகியோர் கிளிநொச்சியிலிருந்து முறிகண்டிக்குச் செல்லும் வழியில், கண்டி வீதிக்கு அண்மையிலுள்ள 'தொண்டமான் நகருக்கு'ச் சென்றார்கள்.

## ஹேவாஹெட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இருபத்து ஒன்று.

ராஜினாமா கடிதத்தை நேற்றுமுன்தினம் அவர் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்ததாகத் தெரியவருகிறது.


# V.R.V.போக்குவரத்துச் சேவை வழங்கும்
# புதிய உல்லாச பஸ் சேவை!

கொழும்பு - யாழ்ப்பாணம் - கொழும்பு

தினசரி இரவு 8-00 மணி கொழும்பு - யாழ்ப்பாணம்
தினசரி இரவு 8-00 மணி யாழ்ப்பாணம் - கொழும்பு

★ கண்ணியமான பாதுகாப்பு பஸ் சேவை ★

ஒருவழிப் பயணக் கட்டணம் ரூபா 60/- மட்டுமே

## கொழும்பில் ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

| 1 | 2 | 3 |
| --- | --- | --- |
| கிறீன்லண்ட் ஹோட்டல், பம்பலப்பிட்டி, | V. R. வடிவேற்கரசன், 271, செட்டியார் தெரு, கொழும்பு—11 | அஜந்தா ஹொட்டல் லிமிட் 125, ஒல்ஹொட் மாவத்தை கொழும்பு |
| தொலைபேசி: 85592, 81986 | தொலைபேசி இலக்கம்: 34800, 32540 | தொலைபேசி இலக்கம்: 32769, 28089 |

## யாழ்ப்பாணத்தில் ஆசனங்கள் பதிவு செய்யுமிடங்கள்

| 1 | 2 |
| --- | --- |
| V. R. V. ட்ரான்ஸ்போட், சேகரம் கட்டிடம், 188/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் | றிக்கோ சுவீட் அன் கிறீம் ஹவுஸ், 370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். |
| தொலைபேசி: இல: 8162 | தொலைபேசி இலக்கம்: 464, 7889 |

பிரயாணிகளின் வசதியை முன்னிட்டு பஸ் பம்பலப்பிட்டி, கிறீன்லண்ட் ஹோட்டலிருந்து இரவு 7—00 மணிக்குப் புறப்பட்டுநேரே செட்டியார் தெரு கோவிலடிக்கு வந்து, அங்கிருந்து இரவு 8—00 மணிக்குப் புறப்படும்.

யாழ்ப்பாணத்திலிருந்து செல்லும் பிரயாணிகள் மேலதிக கட்டணமின்றி வெள்ளவத்தை வரை செல்லலாம்

● யாழ்ப்பாணத்கிலிருந்து திருகோணமலைக்கு வழமைபோல காலை 6—00 மணி சேவை நடைபெறுகின்றது.



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## 26 ஸ்ரீ 2412 DAC லொறி (77 மொடல்)

மேலே குறிப்பிடப்பட்ட வாகனத்தின் விற்பனைக்காகப் பொறியிடப் பெற்ற கேள்விகள் 1982 சித்திரை 27-ம் திகதி பி. ப. 2·00 மணிவரை யாழ்ப் பல்கலைக் கழக நிதியாளரினால் பெற்றுக் கொள்ளப் படும். கேள்விகள் மூடப்பட்டவுடன் அவை திறக்கப் பட்டு இறுதி முடிவு எடுக்கப்படும். கேள்வி திறக்கும் போது கேள்வியாளரை அல்லது அவரின் அதிகாரம் பெற்ற பிரதி நிதியைப் பிரசன்னமாயிருக்குமாறு வேண்டிக் கொள்ளப்படுகிறது.

வெற்றி பெறும் கேள்வியாளர் கேள்விபற்றிய இறுதித் தீர்மானம் எடுத்தவுடன் வாகனப் பெறுமதியின் 25% காசால் செலுத்துமாறு வேண்டிக்கொள்ளப் படுவார். மீதிக் கொடுப்பனவை ஐந்து நாட்களுக்குள் செய்து வாகனத்தை அகற்றுதல் வேண்டும்.

மீளளிக்கப்படும் கேள்வி வைப்பாக ரூபா 100/- வும் மீளளிக்கப்படாத கேள்விக்கட்டணமாக ரூபா 25/- வும் பல்கலைக் கழகச் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுக்கள் விலைக்குறிப்புடன் நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பப்பட வேண்டும். கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் ''லொறி கொள்வனவு செய்வதற்கான விலைக் குறிப்பு'' எனக் குறிப்பிடல் வேண்டும். சித்திரை 19-ம் திகதி தொடக்கம் 23-ம் திகதி வரை உதவிப் பதிவாளருடன் (நிருவாகம்) தொடர்பு கொண்டு அலுவலக நேரங்களில் லொறியை பார்வையிடலாம். எந்தவொரு விலைக்குறிப்பையும் ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பல்கலைக் கழகத்திற்கு உரிமையுண்டு.

பதிவாளர்.

திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்,
01. 04. 1982. 2801.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள ''ஈழநாடு'' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதி, 603ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1982ஆம் ஆண்டு ஏப்ரல் மீ 17-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper [illegible] the General P.O. Sri Lanka. Regd. Q. B. 100236/81. P.O. Box 49, Jaffna. தொலைபேசி: 77 07, 88.., 8188.